Regd. No. 2975.

ஸ்ரீ:

# SRI RAMANUJAN

*Editor:* P. B. ANNANGARACHARYA, L. KANCHEEPURAM

# ஸ்ரீராமாநுஜன் 222

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 116.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்




ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

28—5—1967ல் வெளியிட்டது.

# ஸ்ரீ ராமாநுஜன் — 222



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசனஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர் : **ஸ்ரீ காஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.**

| | | |
|---|---|---|
| ஸம்புடம் **19** | ப்லவங்களு ஆனிமீத்துக்காக 28—5—67 வெளியிடப்பட்டது. | ஸஞ்சிகை **7** |


## திருவாய்மொழி நூற்றந்தாதி—பா. 97

செஞ்சொற் பரன்றனது சீராரும் மேனிதனில்*
வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின்*—விஞ்சுதலைக்
கண்டவனைக் காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட*
திண்டிறல்மாறன்னந்திரு. (97)

| | | | |
|---|---|---|---|
| செஞ்சொல் பரன் | செஞ்சொற்களாலே ப்ரதிபாதிக்கப்படுகின்ற பரமபுருஷன் | அவனை கால் கட்டி | அவன் திருவடிகளைக் கட்டிக் கொண்டு |
| தனது சீர் ஆரும் மேனி தனில் | தம்முடைய சிறந்த திருமேனியிலே | கை விடுவித்துக் கொண்ட | (அவனது மாயவலையினுள் தாம் அகப்படாதபடி) தம்மை விடுவித்துக்கொண்ட |
| வஞ்சித்து செய்கின்ற வாஞ்சை தனின் விஞ்சுதலை கண்டு | வஞ்சனையாகச் செய்கிற விருப்ப மிகுதியைக் கண்டு | திண் திறல் மாறன் | திடமான சக்தியை உடையரான ஆழ்வார் |
| | | நம் திரு | நமக்குச் செல்வம். |

* * *—தம்மோடே வந்து கலந்து தமக்கு விதேயனாய்த் தம் திருமேனியிலே மிகுந்த அபிநிவேசமுடையனாய்த் திருமேனியோடே தம்மைத் திருநாட்டிலே கொண்டு போகவேணுமென்று எம்பெருமான் காட்டுகிற குதூஹலத்தைக் கண்ட ஆழ்வார் 'ஐயோ! இவ்வழுக்குடம்பின் தோஷ மிகுதியை யறியாமல் ராகாந்தனாயிருக்கிற விவனுக்கு இதின் தோஷத்தை யுணர்த்தினோமாகில் இத்தைத் தவிர்வன்' என்று

நினைத்து இதின் தோஷங்களை அவனுக்கறிவிக்க, அபிமத விஷயத்தில் அழுக்கு உகப்பாரைப்போல அதுதானே அவனுக்கு மேல்விழுகைக்கு உடலாக 'பிரானே! இந்த வீணாசையை நீ கழித்துக் கொள்ளவே வேண்டும்' என்று அவனைக் கால்கட்டி அந்த வாஞ்சையை விடுவித்துக் கொண்டாராழ்வார் *செஞ்சொற்கவிகாளென்கிற திருவாய்மொழியிலே. ஸர்வசக்தனை அவனுடைய பிடிவாதத்தையும் ஆழ்வார் ஸ்வசக்தியாலே மாற்றினராதலால் 'திண் திறல் மாறன்' என்று மாமுனிகளிடம் விருது பெற்றுரென்க.

*மங்கவொட்டுன் மாமாயை* என்கிற பாசுரம் இத்திருவாய்மொழிக்கு உயிரானது. "வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றுதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்" என்கிற ஸ்ரீவசனபூஷண ஸ்ரீஸூக்தியும் "வேர் சூடுவார் மண்பற்றுப் போலே" என்கிற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம். இத்திருவாய்மொழியில் ஆழ்வாருடைய ஆனந்தம் அபரிமிதமாயிருந்தது. எம்பெருமான் ஆழ்வாருடைய திருவுள்ளத்தை விடாதே யிருந்தவன் திருமேனியையும் விடாதவனுயினன். பலாப்பழத்திலே ஈமொய்க்குமாபோலே திருமேனியில் அவயவங்கள் தோறும் மொய்ப்பவனுயினன். அபிமத விஷயத்தில் அழுக்கையுகக்கும் காமுகனைப்போலே ஞானிகளின் ஞானபரிமளம் விளங்கும் தேஹத்தை விடமாட்டாத எம்பெருமான். மணத்தின் வாசியறிந்து குருவேரைச் சூடும் போகிகளானவர்கள் மண்ணையுதறினல் மணம் குன்றுமென்று மண்பற்றுக் கழற்றுதே அதனைச் சூடுமாபோலே பரம போகியான ஸர்வேச்வரனும் ஞானிகளை விரும்பி யநுபவிக்கு மிடத்தில் ***ஆஹ்லாத சீதநேத்ராம்பு: புளகீக்ருத காத்ரவாந்*** என்கிறபடியே ஜ்ஞாந கார்யமான விக்ருதிகளுக் கெல்லாம் ஆச்ரயமாய்க்கொண்டு ஜ்ஞாந பரிமளமெல்லாம் தோற்றும்படி யிருக்கிற விக்ரஹத்திலே அளவுகடந்த ஆதரத்தைப்பண்ணி அநுபவிக்கத் தொடங்கினன். அவ்வளவன்றிக்கே அதிசாபலத்தாலே இத்திருமேனியோடே தம்மைத் திருநாட்டிலே கொண்டு போவதாகவும் அபிநிவேசங்கொண்டான்; அதனையறிந்த ஆழ்வார்—'இவன் நம்மைக் கொண்டு கவி பாடுவித்துக் கொள்வதற்காக நம்மை இங்கு வைத்திருக்கிருனென்றிருந்தோம்; இவனுடைய முக்கியமான எண்ணம் அதுவன்று; நம்முடம்பை விரும்பி விடமாட்டாமையாலே நம்முடம்பில் நசையாலேயே இங்கு வைத்தான் போலும்; இவன் வெறு மூடம்பனுயிருந்தான்' என்று கொண்டு எப்படியாவது இப்பாழும் நசையை இவனுக்கு விடுவிக்கவேணுமென்று பார்த்து தேஹத்திலுள்ள தோஷங்களை யறிவித்து, 'பிரானே பரமரஸிகனுன நீ இவ்வழுக் குடம்பையோ விரும்புகிறது? வெகு நன்றுயிருந்தது! என்ன; வத்ஸலனுய் தோஷ போக்யனுனவவன் காமினியின் அழுக்குகக்கும் காமுகன் படியிலே மேல்விழத் தொடங்கினன். அதனை விடுவிக்குமுபாயத்தை ஆழ்ந்து விமர்சிக்கலுற்ற ஆழ்வார்க்கு தைவாதீனமாய் ஒருபாயம் தோன்றிற்று. இவன் நிரங்குச ஸ்வதந்திரனுயிருக்கச் செய்தேயும் நம்மிடத்திலே பாரதந்திரியங்கொண்டாடி நாம் விதித்தபடியே செய்வதாக நம்முடைய நியமனத்தை யெதிர்பார்த்திருக்கின்றமையுண்டே; விதிக்குக் கட்டுப்படுமவன் நிஷேதத்திற்கும் கட்டுப்படவேண்டியவனேயன்றே; உலகில் ஒருவன் சாஸ்த்ரத்துக்குக் கட்டுப்படுகையாவது விதி நிஷேதங்களிரண்டுக்கும் கட்டுப்படுகையேயன்றே. ஆகவே இவனிப்போது நம் சொல்லுக்கு உடன் படுகைக்கு இந்த வழியிலே சென்று பேசுவோமென்று துணிந்து 'பிரானே! என்பக்கலிலே பாரதந்திரியங்

கொண்டாடி எனது நியமனத்தை யெதிர் பார்த்திருப்பதாகச் சொல்லி நின்ற நீ இவ்விஷயத்தில் என் சொல்லுக்கு முரணாக நடப்பது தகுதியோ? என்று கேட்க, இதற்குமேல் எம்பெருமானுக்கு மறுமாற்ற மில்லாமையாலே 'ஆழ்வீர்! நான் உம்முடைய சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டியவனாயினேன். நல் விரகாலே என்னுடைய ஆவலைத் தவிர்த்திரே' என்று சொல்லிக் கொண்டாடி நிற்க, அது கண்ட ஆழ்வார் 'ஸர்வ நியந்தாவாய் ஸர்வாதிகனான ஸர்வேச்வரன் தான் மிகுந்த ஆவலோடு செய்ய நினைத்த செயலையும் நம்முடைய வொரு சொல்லுக்குக் கட்டுப்பட்டு நிறுத்திக்கொண்டானே, இது என்ன சீலம்! இது என்ன பாரதந்திரியம்!' என்று ஈடுபட்டு நெடும்போது உணர்த்தி யற்றிருந்து பிறகு தெளிந்து, இம்மஹா குணத்தில் பிறரும் அமிழ்ந்து போகாமைக்காக 'செஞ்சொற்கவிகாள்!' என்று தம்மோடொத்த சில அநுபவ ரஸிகர்களை விளித்து அவர்களுக்கு அருமையான உபதேசமொன்று செய்யத் தொடங்கினார். பெருவெள்ளத் திலே யிறங்கிப் பெரும்பள்ளத்திலாழங்காற்பட்டுச் சிரமத்துடன் மீண்டவர்கள் நிலை யறியாதார்க்கு ஆழங்காலை யுணர்த்த ப்ராப்தமே யன்றோ; அப்படியேயாயிற்று இதுவும். ஆக, அவனுடைய சீல குணத்திலே கண் வையாதே கொள்ளுங்கோளென்று செஞ்சொற் கவிகளுக்குக் கள்ளவழி காவலிட்டாராயிற்று.

இப்படி ஆழ்வாருடைய திருமேனியிலே வ்யாமோஹம் காட்டின எம்பெருமான் திருமாலிருஞ்சோலைப் பெருமாளென்னுமிடம் இப்பதிகத்தில் விசதமாகும். ஆசார்ய ஹ்ருதயத்தில் (188) "த்யாஜ்ய தேஹ வ்யாமோஹம் மருள்கள் கடியும் மயல்மிகு பொழிலிலே தழைக்கும்" என்ற சூர்ணையும் அதன் வியாக்கியானமும் காண்க.

ஸ்ரீரஸ்து. சுபமஸ்து

# சென்னை A. ஸ்ரீநிவாஸய்யங்காருக்கு ஷஷ்டியப்தபூர்த்தி நிகழ்ச்சி.

சென்னையில் முத்தியால்பேட்டையில் வாழும் ஸ்ரீமான். உவே. A. ஸ்ரீநிவாஸய்யங் கார் ஸ்வாமியைப் பெரும்பாலும் நம்மவர்கள் அறிவர். A. S. Vasan & Sons. என்று ப்ரஸித்தமான நிலைய முள்ளவர். நம்முடைய ஸத்கால க்ஷேபஸபா ப்ரவர்த்தகர்களில் தலைமை பெற்றவர். இந்த ஸ்வாமிக்கு நேற்று சித்திரை மாதம் ஸ்ரீராம நவமியன்று (19—4—67) ஷஷ்டியப்த பூர்த்தி (அறுபதாண்டு நிறைவு விழா ஸம்ப்ராப்தமாயிற்று. இந்த சுபப்ரஸ்துதத்தை திருமலையில் திருவேங்கடமுடையானுடைய ஆனந்த நிலய விமானச்சாயையில் நடத்திக்கொள்ள வேணுமென்று திருவுள்ளம் பற்றிய இந்த ஸ்வாமி பந்து வர்க்கங்களுடனும் மித்ரமண்டலிகளுடனும் முதல் நாளே திருமலை திருப்பதி சேர்ந்திருந்து ப்ரஸ்துத சுப தினத்தன்று சாஸ்த்ரோக்தமான ரீதியில் வெகு சிறப்பாக மாங்கள்யதாரணாதி சுப விசேஷங்களை நடத்திக் கொண்டார். வைதிக கார்யங்களை வழுவற நடத்திவைக்க ஏழெட்டு உபாத்யாயர்கள் சென்னையிலிருந்தே அழைத்துவரப் பட்டிருந்தார்கள். ஸ்ரீமதுபயவே. ராமாயண பூஷணம். வித்வான். கோமல். சேஷாத்ரியா சார்ய ஸ்வாமி யெழுந்தருளியிருந்து அநுக்ரஹித்தது குறிப்பிடத்தக்கது. அடியேனும்

விடை கொண்டிருந்து மங்களாசாஸன பத்யமாலிகை ஸமர்ப்பித்து ஸஹயோக ஸந்தோஷத்தை யநுபவித்தேன்.

இந்த ஸ்வாமியினுடைய பகவத் பாகவத ஆசார்ய பக்திச் செல்வமும் ஆஸ்திக்யமும் வைதிக க்ரியாகலாப ச்ரத்தையும் வித்வத் பக்ஷபாதமும் மிகமிகக் கொண்டாடத் தக்கது. லக்ஷ்மீ கடாக்ஷத்தையும் ஸரஸ்வதீ கடாக்ஷத்தையும் பெற்றிருக்கின்ற இந்த ஸ்வாமிக்கு எவ்விதத்திலும் ஒரு குறையுமில்லை. திருவேங்கடமுடையான் திருவருளால் பௌத்ரதௌஹித்ர ஸம்பத்தும் சீரைவில் ஏற்பட்டு "சதமானம் பவதி சதாயு:" என்று வேதோக்த ரீதியிலே நெடுங்காலம் வாழ்ந்து நீங்காத செல்வம் நிறைந்து விளங்குமாக. ... ... ... ...

(பத்ராதிபர். P. B. A.)

# ஸ்ரீபெரும்பூதூரில் வித்வத்ஸதஸ்ஸு


விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனாசார்யரான பகவத் பாஷ்யகாரருடைய திருவவதார மஹோத்ஸவம் திவ்யதேசங்கள்தோறும் நடைபெற்றாலும் திருவவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் நடைபெறும் வைபவம் நிகரற்றதே. இம்மஹோத்ஸவம் 4—5—67 முதல் 14—5—67 வரை பதினொருநாள் நித்யாபூர்வமென்னும்படியான மஹா வைபவம் பொலிய நடந்தேறியது. இம்மஹோத்ஸவத்தினிடையில் மூன்று நாட்கள் (மேமீ 9, 10, 11 தேதிகளில்) மணவாளமாமுனிகள் ஸன்னிதியில் விசிஷ்டாத்வைத மஹாஸபை ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்விடம் தேவஸ்தான ட்ரஸ்டியான ஸ்ரீமான். பரமார்த்தபூஷணம் நாதெள்ள. ஸம்பத்து செட்டியாரவர்கள் மூன்று நாளும் உடனிருந்து சிறப்புற நடத்திவைத்தார். அனேக வித்வான்கள் எழுந்தருளியிருந்து எம்பெருமானார் தரிசனத்தின் பெருமைகளையும் ஸ்ரீஸ்வாமி ஸ்ரீஸூக்தி விசேஷார்த்தங்களையும் உபந்யஸித்து ச்ரோதாக்களை மகிழ்வித்தார்கள். திருமலை திருப்பதி ஜீயர் ஸ்வாமியோடு கூட உள்ளூர் எம்பார் ஜீயர் ஸ்வாமியும் ஸ்ரீ காஞ்சி. வாதிகேஸரி அழகிய மணவாள. யதீந்த்ரப்ரவண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியும், உள்ளூர் யதிராஜ ஜீயர் மடாதிபதி பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியும் எழுந்தருளியிருந்து ஸதஸ்ஸை சோபிக்கச்செய்தது * பொலிக பொலிக பொலிக வென்று காப்பிடத்தக்கதாயிருந்தது.

சென்னை மயிலையில் வைணவ அரங்கின் ப்ரவர்த்தகர்களில் ஒருவரான ஸ்ரீமான். R. ராமஸ்வாமியவர்களது பெருமுயற்சியே இந்த ஸதஸ்ஸு கூடுவதற்கு மூல காரணமாயிருந்தது. இவர்கள் மேன்மேலும் உத்ஸாஹம் பெருகி ஆங்காங்கு திவ்ய தேசங்களில் விசேஷோத்ஸவங்கள் நடைபெறுங்காலங்களில் இத்தகைய ஸ்ரீ வைஷ்ணவ மகாநாடுகளை நடத்தி வைக்கக் குதூஹலம் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

"ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா,
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ"


எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீமான். (சென்னை) A. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவக் காட்சி.





ஸ்ரீமான். (சென்னை) A. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின்
ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவக் காட்சி.





# ஸ்ரீ காஞ்சியில் உத்ஸவ பரம்பரைகள்.

திருமங்கையாழ்வார் திருநறையூர்ப் பாசுரமொன்றில் *வேள்வும் விழவும் வீதியிலென்றுமறாதவூர்* என்று நித்யோத்ஸவமான திவ்ய தேசமென்று மங்களாசாஸனம் செய்தருளியுள்ளார். அது *ஆசம்ஸாயாம் பூதவச்ச* என்கிற வியாகரண ஸூத்ரப் படியே ஆசம்ஸாமாத்திரமாய் நிற்குமத்தனை. கோயில் திருமலை பெருமாள் கோயிலென்னும் மூன்று திவ்ய தேசங்களில் மட்டுமே நித்யோத்ஸவாநுபவம் *பொலிக பொலிக வென்னும்படி நடைபெறுவது. பிரகிருதம் பெருமாள் கோயிலென்கிற ஸ்ரீ காஞ்சீபுரீ மஹோத்ஸவங்களைப் பற்றி விஜ்ஞாபிக்கிறேன். நடைபெறுவது மே மாதம். (சித்திரையும் வைகாசியுமென்க.) ஆசாரியர்களில் தலைவரான எம்பெருமானாருடையவும், ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாருடையவும், "தேவிற்சிறந்தவர் தேவப்பெருமாள்" என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ ஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதரான பேரருளாளப் பெருமாளுடையவும் மஹோத்ஸவங்கள் முறையே நடைபெற்ற அதிசயங்கள் அறிவிக்கப் படுகின்றன.

1. **எம்பெருமானார் மஹோத்ஸவம்.** அவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரிலும், விபவஸ்தலமான திருவரங்கம் திருநாராயணபுரங்களிலும் நடைபெறுவது நாடறிந்ததே. *தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப் பூண்டவன்பாளனிராமானுசன்* என்று தேவப் பெருமாள் திருவடிவாரத்தில் அன்பே நிரூபகமாகப் பெற்ற எம்பெருமானார்க்கு ஸ்ரீஹஸ்தி கிரியின்கீழ் நடைபெறுவதே மேன்மை பெறுமாதலால், இவ்விடத்தில் இப்போது சில வருஷமாக விசேஷ மலர் நடைபெற்றுவருமிவ்வுத்ஸவத்தின் மேன்மை நிகரற்றது. இக் காஞ்சீபுரியில் ஸன்னிதிவீதியில் எழுபத்தைந்து ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு மஹா வைபவ சாலியாயெழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபயவே. திருமலை யிச்சம்பாடி. நரஸிம்ஹாசாரியர்ஸ்வாமி தம்மிடத்தில் காலக்ஷேபங்கேட்ட சில சிஷ்யர்களைக் கொண்டு சென்னையில் ஒரு பெரிய க்ருஹம் வாங்குவித்து அதிலிருந்து வரும் வாடகை வருமானத்தைக் கொண்டு இத்தலத்து எம்பெருமானாருடைய மஹோத்ஸவத்தில் சாத்துமுறை நன்னூபயம் நடத்திவரும்படி திட்டம் செய்தருளியிருந்தார். மேலே குறித்த வாடகை வருமானம் பரிமிதமாக இருந்த படியால் ஸாமானியமாக நடந்து வந்தது. அந்த க்ருஹம் ஸமீபகாலத்தில் (சில வருஷங் களுக்கு முன்பு) விற்பனை செய்யப்பட்டதில் கிட்டத்திட்ட எண்பதினாயிரம் ரூபா வரையில் கிடைத்து சேமிக்கப் பட்டிருக்கிறது. அந்தச் சேமநிதியின் வட்டி வருமானத்தைக் கொண்டு பத்துநாளுத்ஸவமும் இரண்டு வேளையும் சீரும் சிறப்பும் பொலிய நடைபெற்று வருகிறது. சித்திரையில் செய்ய திருவாதிரையான சாத்துமுறை யன்று தேவப்பெருமாள் திருவீதி புறப்பாடு கண்டருளி விசேஷ வாணவேடிக்கை களுடனும் வாத்ய கோஷங்களுடனும் எம்பெருமானார் ஸன்னிதிக் கெழுந்தருளி நடை பெற்ற வைபவங்கள் அப்ரமேயமானவை.

2. **நம்மாழ்வாருத்ஸவம்.** எம்பெருமானாருத்ஸவம் திருவாதிரை யன்று தலைக் கட்ட, மறுநாள் புநர்வஸூ வன்றே நம்மாழ்வாருத்ஸவம் தொடக்கமாயிற்று. இவ்வுத் ஸவம் நடைபெறாத திவ்ய தேச முண்டோ? எனினும், தேவப்பெருமாள் ஸன்னிதியில் நம்மாழ்வார்க்கு மிக்க சிறப்புண்டு. ஆழ்வார் பிரதமப் பிரபந்தமான திருவிருத்தம்


தொடங்கும்போதே *இமையோர் தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே* என்று தேவப்பெருமானையே விளித்தபடியாலும், சரமப் பிரபந்தமான திருவாய்மொழியின் தொடக்கத்திலும் *அயர்வறுமமரர்களதிபதியின் துயரறு சுடரடியைத் தொழுதெழுமாறு திருவுள்ளத்திற்கு உபதேசித்தபடியாலும், இந்த மாநஸோபதேசமுத்ரையுடனே ஆழ்வார் இந்த திவ்ய தேசத்தில் விலக்ஷணமாக ஸேவை தந்தருளுகிறபடியாலும் நம்மாழ்வார்க்கு இத்தலத்தில் ப்ரபாவாதிசய முண்டென்பது விவரண நிரபேக்ஷம். இந்த ப்ரபாவத்திற்குத் தக்கபடியாகவே நம்மாழ்வாருடைய திருநக்ஷத்ரமஹோத்ஸவம் அநாதி காலந்தொட்டே வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்த திவ்ய தேசத்து ஆழ்வாராசார்ய மஹோத்ஸவங்களில் நாலாயிரமும் பூர்த்தியாகக் கேட்டருளுமுத்ஸவம் நம்மாழ்வாருடையதும் மணவாளமாமுனிகளுடையதுமே யென்று ஜகத் ப்ரஸித்தம். இவ்வுத்ஸவம் தேவப்பெருமாளுடைய ப்ரஹ்மோத்ஸவத்திற்கு அணித்தாக ப்ராப்தமாவதனால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி வேளை தோறும் மிக்கு வரும். *குழாங்களாய்அடியீர்! உடன்கூடிநின்றாடுமினே* என்ற ஆழ்வாருடைய மனோரதம் இத்தலமொன்றிலேதான் ஸார்த்தகமென்னக் குறையில்லை. தேவப்பெருமாளுடைய ஸன்னிதி கிட்டமும் உபயக்காரர்களின் கைங்கரியமும் சேர்ந்து போஜ்யாஸனாதி விசேஷங்கள் மிகமிகப் பரிமளிக்கும். வைகாசித் திரு விசாகமான திருநக்ஷத்ரோத்ஸவத்தன்று *அருளாழிப்புள் கடவீர் அவர் வீதியொருநாளென்று, அருளாழியம்மானைக் கண்டக்காலிது சொல்லியருள்* என்ற ஆழ்வார் கோரிக்கையைத் திருவுள்ளத்திலே கொண்ட அருளாளன் சிற்றஞ்சிறு காலையில் அருளாழிப்புள்ளைக்கடாவி ஆழ்வார் ஸன்னிதி வாசலிலே வந்து சேர்ந்து மாலை திருப்பரிவட்ட மரியாதை பஹுமானங்கள் அருளித் திருவீதிகளெல்லாமலங்கரித்து பன்னிரண்டு மணி யளவில் ஸன்னிதி சேர்ந்து வாஹனங்களைந்து ஆழ்வார் ஸன்னிதிக்குள்ளே யெழுந்தருளி ஸ்வப்ரபந்தங்களெல்லாம் கேட்டருளி நாலாயிரமும் சாத்துமுறையாகி தீர்த்த ப்ரஸாத விநியோகங்களும் தலைக்கட்டி ஆழ்வார் மதுரகவிகள் நாதமுனிகளுடனே தேவப்பெருமாள் புறப்பாடு கண்டருளி ஸன்னிதி சேருமழகு விண்ணுளாரும் விரும்பி ஸேவிக்கவுரியது.

3. **தேவப்பெருமாள் வைகாசித் திருநாள்.** ''வையங்கண்ட வைகாசியுத்ஸவம்'' என்று அநாதிகாலமாக ஆபாலபூபாலம் வழங்குவது. தேவப்பெருமாளுக்கு நடைபெறும் ஸாதாரண பஞ்சபருவோத்ஸவங்களின் சிறப்பு வெளியூர்களில் நடைபெறும் ப்ரஹ்மோத்ஸவங்களுக்கு ஏகதேசமும் வாய்க்காதென்பதை அநுபவ ரஸிகர்கள் அறிந்துள்ளார்கள். உலகமெல்லாம் வந்து திரண்டு குழாங்கூடி யநுபவிக்குமிந்த மஹோத்ஸவத்தின் சிறப்பை அறியாதவர்கள் சிலரேனுமிருந்தாலன்றோ இங்கு நாம் விவரித்தெழுதவேண்டும். உத்ஸவாங்கமாக நாலுநாள் முன்னே நல்ல மழை பெய்திருந்ததனால் தீர்த்தச்ரமமில்லாமலும், வீதிதோறும் நடைபெற்ற ததியாராதனைகளினால் ப்ரஸாத ச்ரமமில்லாமலும், இந்த ஸன்னிதிக்கு விசேஷ ப்ரஸித்தியை விளைத்த ஸ்ரீவைஷ்ணவ சச்சரவுகளொன்றுமில்லாமலும் காலகாலத்தில் உத்ஸவம் நடைபெற்று நிறைவேறிற்று. திருத்தேர் ஒருநாளில் நிலை சேரமுடியாமல் இரண்டாநாளிரவு நிலை சேர்ந்ததனால் ஒரு நாளுத்ஸவம் அதிகப்பட்டது. ... ... ... ❀

*தழைநல்ல வின்பந்தலைப்பெய்து எங்குந் தழைக்கவே.*

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# உத்தமூரர் வ்யாஸ விமர்சம்

நிகமாந்த குருத்தம திவ்யக்ருபா நிதிலாப ஸமேதிதஹர்ஷமநா:
ப்ரதிவாதிபயங்கரஸூரிரஸௌ விதநோதி முதம் விதுஷாம் ஹ்ருதயே.
கவிதார்க்கிக கேஸரிஸூக்திஸுதாஜலதௌ ஸததம் விநிமக்நமநா:,
ப்ரதிவாதிபயங்கரதாஸ இதம் ப்ரததாதி ரஸாயநமார்யஹிதம்.
உத்தமூர்வீரரக்வார்யவ்யாஸம் ஸம்சோதயந்நஹம்.
ஆவிஷ்குர்வந் பஹூந்நர்த்தாந் ஆண்டவன்ஹ்ருத் ப்ரஹர்ஷயே.

1. "ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்தபூர்த்திமலர்" என்னும் புத்தகத்தை ப்ரக்ருத ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவக் கமிட்டியார் நமக்குப் பேரன்புடன் அனுப்பி வைத்தார்கள். புத்தகத்தின் தோற்றம் பரம ரமணீயமாயிருந்தபடியாலும் பல பெரியார்களின் கட்டுரைகள் இடம் பெற்றிருந்தபடியாலும் அந்தக் கட்டுரைகளைக் கூடியமட்டில் வாசித்துப் பார்ப்போமென்று ஆசையுடன் வாசிக்கத் தொடங்குகையில் ஸ்ரீ. உ. வே. உத்தமூர் வித்வான் ஸ்வாமியின் உபய வேதாந்தமென்னும் கட்டுரை முந்துறமுன்னம் காட்சிதரவே அதனை வாசித்தேன். அரசாணிபாலை வேங்கடாத்வரியின் ஓர் இதிஹாஸம் நினைவுக்கு வந்ததனால் அதை முன்னம் தெரிவிக்கிறேன். பண்டிதரொருவர் காவியமொன்று இயற்றி இவரிடம் (அபிநந்தன பத்ரிகை பெறுவதற்காகக்) கொணர்ந்து காட்டினாராம். இவர் ஒன்றும் சொல்லாமலே பார்த்துக்கொண்டு இருக்கையில், 'ஏதாவது தப்பு அகப்படுமாவென்று பார்க்கிறீரோ?' என்று கேட்டாராம் வந்த பண்டிதர். அதற்கு வேங்கடாத்வரி சொன்னாராம் — 'இல்லையில்லை; ஏதாவது நல்லது அகப்படுமாவென்றுதான் பார்க்கிறேன்' என்று. இக்கட்டுரையை நம் ஆண்டவன் கடாக்ஷித்து எங்ஙனம் ஸஹித்திருக்கிறாரென்று தெரியவில்லை. இது அவருடைய கடாக்ஷ வீக்ஷணத்திற்கு இலக்காயிராதென்றே நிச்சயித்தேன்.

## எழுதுகிறார் உத்தமூரர்—

2. "தமிழ் மறைகளையும் சேர்த்து உபய வேதாந்தம் நாம் கற்க வேண்டுமென்று நாதமுனிகள் தொடக்கமாக நமக்கு உபதேச ஸம்ப்ரதாயம் ஏற்பட்டிருக்

கிறது. இதனால் அருளிச்செயல்களுக்கு வேதத்தைப்போல் பூர்ணமான ஸ்வாதந்த்ரியம் கொடுத்ததாகாது" என்று. விவேகிகளான வித்வான்களுக்கு விஜ்ஞாபிக்கிறேன். அடியேனுடைய எந்த விமர்சமும் சப்தஸந்தர்ப்பம் அர்த்த ஸந்நிவேசம் ஆகிய இரண்டையும்பற்றியே நிகழ்வதென்பதைப் பண்டிதவுலகம் நன்கறிந்துள்ளது. அர்த்தத்திற்கு முற்பட்டது சப்தமாகையால், சப்த ஸந்தர்ப்பம் அஸங்கதமென்பதை முன்னம் காட்டிவிட்டு, பிறகு அர்த்த ஸந்நிவேசம் அத்யந்தம் அஸம்பத்தமென்பதை ஸ்தாபிக்கிறேன். ''அருளிச்செயல்களுக்கு வேதத்தைப்போல் பூர்ணமான ஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததாகாது'' என்றெழுதிய விவர் எவ்விதமான பொருளை நெஞ்சிற் கொண்டாரோ அந்தப்பொருளுக்குச் சேர வாக்கியமெழுத வேணுமாகில், "அருளிச் செயல்களுக்கு வேதத்திற்குப்போல் பூர்ணஸ்வாதந்த்ர்யமுள்ளதாக நினைக்கமுடியாது" என்றோ, ''அருளிச்செயல்களை வேதத்தைப்போல் பூர்ண ஸ்வாதந்த்ர்ய முடையனவாகக் கொள்ளவொண்ணாது" என்றோ வேறு வகையாகவோ எழுதப்பட்டிருக்கவேண்டும். 'சைத்ரன் மைத்ரனைப்போல் ஸமர்த்தனல்லன்' என்கிற வாக்யத்தை ''சைத்ர: மைத்ரமிவ ந ஸமர்த்த:'' என்று மொழிபெயர்ப்பாரைப் போலவே பல வெள்ளைக்காகிதங்களைக் கறுப்பாக்கிக்கொண்டிருப்பார்க்கு இத்தகைய உத்போதனங்களை நாம் பண்ணப் புகுவது 'ஸூசிராஷூதே வர்ஷிதம்' என்றதோடொக்குமத்தனை. பங்க்திகளை அபாதிதமாக எழுதக் கற்பது தனிப்பட்டதொரு பாக்யமாதலால் அந்த பாக்கியம் பெறாதவர்கள் 'ந நிரஸநீயா:, அபிது சோசநீயா:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்திக்கட்டளையிலே எண்ணத்தக்கவர்கள். இவர்க்கும் இவரைப் போன்றவர்கட்கும் மேட்டுமடையான தமிழ்ப் பங்க்தி வித்யாஸ வைகரி கிடக்கட்டும்; இவர்கள் கற்ற ஸம்ஸ்க்ருதத்திலாவது தெளிவு உள்ளதோ வென்று பார்க்கில், அதிலும் சோசநீய ஸ்திதியே யென்பதை ஸ்தாலீபுலாகந்யாய ஸ்வல்பமே காட்டிவிட்டு மேலே விஷயத்திற் செல்லுவேன்.

3. வடமொழியில் உபப்ர்ம்ஹண மென்கிறபதம் அப்ரஸித்தமன்று. ஸுப்ரஸித்தம். *இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ர்ம்ஹயேத்* *வேதோபப்ர்ம்ஹணார்த்தாய* *உபப்ர்ம்ஹித வேதாய* இத்யாதிவசனங்கள் அனந்தங்கள். இவ்விடங்களிலும் மற்றும் எவ்விடங்களிலும் ப்ரஹ்மசப்தத்திற்போல் ஹகாரமகார ஸம்யோகம் ஸர்வாத்மநா கிடையாது. கஜகர்ஜிதவாசகமான ப்ர்ம்ஹிதசப்தத்திற்போல ஸம்யுக்தாக்ஷரஸம்பந்த கந்தமுமின்றிக்கே இடையில் அநுஸ்வாரமேயுள்ளது. இதைப்பற்றின தத்துவம் அடியேனுடைய நூல்களில் ப்ரஸங்காத் பலவிடங்களில் விவரிக்கப்பட்டுள்ளதைப் பண்டிதர்கள் கண்டு தெளிவுற்றிருக்கிறார்கள். சென்ற வருஷத்து மலர்விழாமலரொன்றில் வந்த இவருடைய வியாஸத்தையும் மற்றும் சில வித்வான்களினுடைய வியாஸங்களையும் விமர்சித்தெழுத நேர்ந்த விலக்ஷணஜகதுபகார மென்னும் நூலிலும் இந்தத் தெளிவு காட்டப்பட்டுள்ளது. அது ஸ்ரீராமாநுஜன் 214ல் வெளிவந்துளது. (அதில் பக்கம் 7, 8. காண்க.) ப்ரக்ருதம் அடியேன் விமர்சிக்கும் உபயவேதாந்த மென்னும் கட்டுரையில் விவாதாஸ்பத பதம் எத்தனை தடவை ப்ரயோகிக்கப் பட்டுள்ள தென்பதை எண்ணிப் பார்க்க வேணும். அத்தனை தடவைகளிலும் அந்தோ! மருள் மலிந்துள்ளது. ஐந்து அக்ஷரங்களையுடைய உபப்ர்ம்ஹண மென்கிற பதத்தில் (உ, ப, ண)

என்கிற மூன்றெழுத்துக்களில் மருள் புகுவதற்கு ப்ரஸக்தியில்லை. மற்ற இரண்டெழுத்துக்களை ஸம்யுக்தாக்ஷரங்களாகக் கொள்ளும் மருள் இவரையொத்த பண்டிதர்களிடத்தில் பெரும்பாலும் குடிகொண்டிராநின்றது. பவர்க்க-த்ர்தீயத்தின்மேல் ரேப மேறியிருப்பதாகவும், (அடுத்தபடி) ஹகார மகாரஸம்யோக முள்ளதாகவும் மருண்டிருக்கும்நிலை அந்தோ! இவர்களை இந்த யுகத்தில் விட்டு விலகாது போலும் சப்த ஸ்வரூபத்தை உணரமாட்டாதது போலவே இதைப் பற்றி நாம் விளக்கி யெழுதுவதையும் உணர்ந்து கொள்ள மாட்டாதவர்களுக்கு இன்னமும் பன்னியுரைக்க லஜ்ஜித்து நிற்கிறோம். இனி விஷயத்திற் புகுவோம்.

4. ப்ரக்ருதவ்யாஸத்தில்—"இதனால் அருளிச் செயல்களுக்கு வேதத்தைப் போல் பூர்ணமான ஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததாகாது; இதிஹாஸ புராணங்கள் வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாகின்றது போல் இவையும் உபப்ருஹ்மணங்களே" என்கிற வாக்கியம் முன்னம் விமர்சத்திற் கொள்ளப்படுகிறது. இதைக் கண்டவொரு ஸ்யூத்யர் இவரிடம் வந்து "நாமெல்லாம் ப்ரபந்தம் கபந்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க, நீர் புதிதாக அருளிச் செயலென்றெழுத ஆரம்பித்தீரே! இதென்ன? நீரும் ப்ரபந்தரக்ஷையென்றுதானே போட்டு வருகிறீர்; நம்மவர்களில் யாராவது அருளிச் செயலென்றதுண்டா? ஏதுக்கு இப்படி யெழுதி வைத்தீர்?" என்று கேட்டதாகவும், 'ஐயோ! மருமம் உங்களுக்குத் தெரியவில்லையே, "ஆலங்க்ர்த்ய சிரச்சேத:" என்று ஒன்று நீங்கள் கேள்விப் பட்டதில்லை போலும்; அந்த ரீதியில் பண்ணின அலங்கார மன்றோ இது" என்று விடை கூறினாராம். இதனுண்மை நமக்கு நேராகத் தெரியாது; செவிப்பட்ட ப்ரவாதத்தை யெழுதின வத்தனை. உண்மையில் இங்ஙனே சொல்லக் கூடியவரே இவர்.

5. அருளிச் செயலென்கைக் கிடான ஆதராதிசயம் அந்தரங்க ஸாக்ஷிகமாகவுள்ளதாகில் இங்ஙனே வசனவ்யக்தி வெளிவருதற்கு ப்ரஸக்தியே கிடையாதென்பதை பாலிசருமறிவர். "பூர்ணமான ஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததாகாது" என்கிற இவருடைய அபசப்தத்தை அநுவதிப்பதும் அபசாரமேயாயினும் கலங்கினவர்களைத் தெளிவிக்க வேண்டியிருப்பதால் எடுத்துக்கழிக்கிறபடி. யாரும் இவரிடத்தில் வந்து "திவ்யப்ரபந்தங்களுக்கு வேதத்தோடொப்பப் பூர்ணமான ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கவேணும்" என்று பிச்சை கேட்கவில்லை. ஸ்வாதந்த்ர்யமாவது என்ன? பூர்ணமான ஸ்வாதந்த்ர்யமாவது என்ன? அது வேதத்திற்கு உள்ள விதம் யாது? என்பதை நன்கு உபபாதித்துக் காட்டிவிட்டன்றோ 'அது இதற்கில்லை' என்னவேணும். நம்முடைய பூர்வாசார்யர்களின் கோஷ்டியில் திவ்யப்ரபந்தங்களைப் பற்றி மூவகையான நிர்வாஹங்களைக் காண்கிறோம். 1. வேதஸாம்யம், 2. வேதோபப்ர்ம்ஹணஸாம்யம், 3. வேதப்ராதுர்ப்பாவ விசேஷாத்மகத்வம் – என்பனவாம் அந்த நிர்வாஹங்கள்.

6. ஆசார்ய ஹ்ருதய திவ்ய சாஸ்த்ரத்தில் (39) "எவ்வுலகத் தெவ்வெவையுமென்கையாலே வேதம் பஹுவிதம்" என்கிற சூர்ணைக்கு அவதாரிகையிட்டருளுகிற மணவாளமாமுனிகள்—"இனிமேல் *சந்தங்களாயிரமென்று திருவாய்மொழிக்குச் சொன்ன வேதத்வத்தை ஸாதிக்கக் கோலி ப்ரதமம் ஏவம்விதமா

யிருப்பதொரு வேதமுண்டோ வென்கிற சங்கைக்குப் பரிஹாரம் பண்ணுகிறார்'' என்றருளிச் செய்ததையும்;

7. மேலே (54.) "அன்றிக்கே ஸ்வரூபகுண விபூதி சேஷ்டிதங்களை விசதமாக்குகிற பஞ்சராத்ரபுராணே திஹாஸங்கள் போலே நீலபாருபோக்தி தெரியச் சொன்ன வேதோபப்ர்ம்ஹணமென்பர்கள்'' என்ற சூர்ணையின் அவதாரிகை— ''ஆக விப்படி இப் ப்ரபந்த சதுஷ்டயத்துக்கும் வேதஸாம்யத்தை ஸாதித்தார் கீழ்; இங்ஙனன்றிக்கே இதுதனக்கு வேதோப ப்ர்ம்ஹணஸாம்யமும் சொல்லுவர்களென்கிறார் மேல்" என்றருளிச் செய்ததையும்; மேலே (70) "அதவா *வேத வேத்ய ந்யாயத்தாலே பரத்வபரமுது வேதம்'' இத்யாதி சூர்ணையின் அவதாரிகையில்— "ஆக இதுக்குக் கீழ் திவ்யப்ரபந்தத்துக்கு வேத ஸாம்யமும் ததுபப்ர்ம்ஹணஸாம்யமும் உண்டென்னுமிடத்தை யருளிச்செய்தார்; இங்ஙனன்றிக்கே வேதாவிர்ப்பாவ விசேஷமாய் இவ்வாழ்வாராலே நிர்மிதமாக ப்ரஸித்தமாயிருப்ப தொன்றென்று இதுக்கு இன்னமும் ஒரு யோஜநை பண்ணுகிறார்" என்றருளிச் செய்ததையும் ப்ரமாண சரணர்கள் குறிக்கொள்ளவேணும்.

8. அன்றியும், இவற்றினிடையில் உபப்ர்ம்ஹண ஸாம்ய மருளிச்செய்தபோது தோன்றினவொரு சங்கைக்குப் பரிஹாரமாக (68) 'பாரத கீதைகளின் வேதோப நிஷத்த்வம் போலே இதுவும் வ்யாக்க்யை யானாலும் வேதரஹஸ்யமாம்' என்றருளிச் செய்த சூர்ணையும் நோக்கத்தக்கது. இதற்கு மாமுனிகளிட்டருளின வியாக்கியானம்—''ஆனால் இத்தை உபப்ர்ம்ஹண ஸமமாகச் சொன்ன பக்ஷத்தில் வேதவ்யாக்க்யை யாமதொழிய *வேத ரூபமிதம் க்ருதம்* *த்ராவிட வேத ஸம்ஹிதை:* என்று அபியுக்தர் சொல்லுகிற வேதத்வம் இதுக்குக் கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (பாரதகீதைகளின்) இத்யாதியால். அதாவது வேதோபப்ர்ம்ஹணமான மஹாபாரதமும் அதில் ஸாரமான ஸ்ரீகீதையும் *வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாந்* என்றும் *பகவத் கீதாஸூபநிஷத்ஸு* என்றும் சொல்லுகிறபடியே வேதமும் உபநிஷத்துமாகிறாப்போலே இது வேதவ்யாக்க்யையான உபப்ர்ம்ஹணமானாலும் வேத ரஹஸ்யமா மென்கை. வேத ரஹஸ்யமாவது வேதத்தில் ரஹஸ்ய பாகமான உபநிஷத்து; கீழ்ச் சாந்தோக்ய ஸமமாக விறே சொல்லிற்று; ஆகையால் இந்த பக்ஷத்திலும் இதின் த்ராவிட வேதத்வஹாநி வாராதென்று கருத்து.'' என்பதாம்.

9. இனி நிகமாந்த மஹாகுரு ஸாதித்திருப்பதையும் காண்போம். த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவலி யென்றும் த்ரமிடோப நிஷத்ஸாரமென்றும் திருநாமமிட்டு இரண்டு நூல்களருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். இதில் உள்ளே யிறங்கி அநுபவிப்பது பிறகு ஆகும். த்ரமிடோப நிஷத் தென்றே வ்யபதேசித்தருளி யிருக்கிறபடியை நோக்குமின். "த்ரமிடோபநிஷத் த்ரஷ்டு ரஸ்ய மாஹாத்ம்யமத்புதம்'' என்பதும் நிகமாந்த குருஸூக்தி ரத்னம். 'த்ரமிடோபநிஷத்கர்த்து:' என்றோ 'த்ரமிடோபநிஷத் ஸ்ரஷ்டு:' என்றோ சொல்லிற்றிலர். 'த்ரஷ்டு:' என்று சிறப்பாக ஸாதித்தது – பட்டர் *ருஷிம் ஜுஷாமஹே* என்கிற ச்லோகத்தில் ''ஸஹஸ்ரசாகாம் ய: அகார்ஷீத்" என்றோ 'அஸ்ராக்ஷீத்' என்றோ அருளிச்

செய்யாமல் "ஸஹஸ்ர சாகாம் த்ராவிடம் ப்ரஹ்மஸம்ஹிதாம் அத்ராக்ஷீத்" என்றருளிச் செய்திருக்கையாலே அதனை அடியொற்றியே ''த்ரமிடோப நிஷத் த்ரஷ்டு:'' என்று நிகமாந்த மஹா குருதாமும் பணித்தபடி.

10. வேதத்திற்குள்ள ஸ்வாதந்த்ர்யம் திவ்யப்ரபந்தத்திற்குச் சொல்ல முடியாதென்ற இவருடைய தாத்பர்யம் என்ன வென்பதை ஆர அமர ஆராய வேண்டும். வேதத்தின் ஸ்வாதந்த்ர்யத்தை இவர் எந்த அம்சத்தில் கண்டார்? என்று கேட்போமாயின், ஆர்ஜவத்துடன் விடையளிக்கவேணுமிவர். எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லும் ஆழ்வான் ''ஸ்வாதந்த்ர்யமைச்வர மபர்யநுயோஜ்யமாஹு:'' என்றார். அப்படி நியோக பர்யநுயோக அநர்ஹத்வ ரூபமான ஸ்வாதந்த்ர்யம் அவனுக்கிருக்கச் செய்தேயும் அந்தஸ்வாதந்த்ர்யத்திற்கும் பங்கம் வருவதாக ஒரு சங்கையும் அதற்குப் பரிஹாரமும் பட்டர் அருளிச்செய்துள்ளார். அதைச் சுருக்கமாகக் கேளீர்; ''ஸ்வாதீநே ஸஹகாரி காரணகணே'' என்று தொடங்கி ''ஸ்ரஷ்டுஸ் ஸ்ருஜ்யதசாவ்யபேக்ஷணமபி ஸ்வாதந்த்ர்யமேவ'ஆவஹேத்'' என்றருளிச் செய்தார். இங்கு சோத்ய மென்ன வென்னில்; ஸர்வேச்வரன் செய்யும் ஸ்ருஷ்டியானது அநவரதமும் நடந்து கொண்டிருப்பதில்லை; ஸ்ருஜ்ய வஸ்துவினுடைய ஒரு விபாகதசையை ப்ரதீக்ஷித்தே அது நடைபெறுகிறது; அப்படியானால் நைரபேக்ஷ்யமில்லையாகி ஸாபேக்ஷத்வமே தேறுவதனால் ஸ்வாதந்த்ர்யத்திற்கு ஹாநி வருவதாக சோத்யம். இதற்கு எங்ஙனே பரிஹாரம் செய்தருளினாரென்னில்; பூர்வார்த்தத்தில் சில த்ருஷ்டாந்தங்களைக் காட்டி அங்குப் போலவே இங்கும் ஸ்வாதந்த்ர்யஹானி வாராது என்று நிகமித்தருளினாராயிற்று. இவ்வோ கட்டளைகளிலே திவ்ய ப்ரபந்தத்திற்கும் ஸ்வாதந்த்ர்யஹானியை இவர் உத்தாபனம் பண்ணுவதனால் ஒரு ஹானியுமில்லை. ஆனாலும் 'வேதத்திற்குப்போலே திவ்யப்ரபந்தத்திற்குப் பூர்ணமான ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கப்படவில்லை' என்னுமிவருடைய எண்ணம் எத்தகைத்து! என்பது பரீக்ஷிக்கப்படவே வேண்டும்.

11. கீழே ப்ரஸ்தாவித்த த்ரமிடோப நிஷத் தாத்பர்ய ரத்நாவலியில்— ''யத்தத் க்ருத்யம் ச்ருதீநாம் முநிகணவிஹிதைஸ் ஸேதிஹாஸை: புராணை: தத்ராஸௌ ஸத்வஸீம்நச் சடமதநமுநேஸ் ஸம்ஹிதா ஸார்வபௌமீ" என்று பணித்துள்ள சுலோகத்தின் கருத்தை இவர் உணரப்பெற்றிருந்தால் அநவஸரமான இந்த ப்ரஸங்கத்தில் கைவைத்திருக்கவே மாட்டார். ஸ்ரீவைஷ்ணவ ஸந்தானத்திற் பிறந்து வைத்து, பூர்வாசாரியர்களொருவரும் ப்ரஸங்கியாத வொரு விஷயத்தைக் கிளப்பி ஸ்ரீவைஷ்ணவர்களின் மனத்தைப் புண்படுத்துமிவர்............ இந்த வாக்கியத்தை முடிக்கத் தெரியாமல் திகைக்கிறேன். கோஷ்டீ பஹிஷ்டீ க்ருத: என்று தான் முடிக்கவேணும். இதில் ஸந்தேஹ மென்ன?

12. *அநந்தா வை வேதா:* என்கிறபடியே அபரிமிதங்களான வேதராசிகள் தாம் சொல்ல எடுத்துக்கொண்ட விஷயங்கள் ஒன்றிரண்டல்ல, பத்தெட்டல்ல, ஆயிரம் பதினாயிரமுமல்ல, ["பாரே பரார்த்தம் கணநா யதி ஸ்யாத்."] அவ்விஷ

யங்களை விளக்கிக்காட்ட யாரால் முடியும்? *ரேதஸ் ஸிஞ்சந். ப்ரஜா: ப்ரஜநயந்* என்றும், *நக்நங்க்ருத்ய ஊருமுப ப்ரவர்த்தயதி, ஊருணாஹி ரேதஸ் ஸிச்யதே, ....அத ப்ரஜா: ப்ரஜாயந்தே. *ந மா யபதி கச்சந* த்ரிம்சதஸ்யா ஜகநம் யோஜநாநி* என்றிப்படிப்பட்ட அரிய பெரிய விஷயங்களை விளக்குவதில் வேதங்களுக்கே பூர்ணமான ஸ்வாதந்த்ர்யமுள்ளதென்றும், இத்தகைய விஷயங்களையெடுத்துரைப்பதில் திவ்யப்ரபந்தங்களுக்கு ஸ்வாதந்த்ர்ய லேசமும் கிடையாதென்றும் தாராளமாக இசையத்தட்டில்லை. திவ்ய ப்ரபந்தங்கள் வெளியிட விரும்பிய விஷயங்கள் ஐந்தே; அவைதாம் *மிக்கவிறை நிலையும் மெய்யாமுயிர் நிலையும், தக்கநெறியும் தடையாகித் தொக்கியலும், ஊழ்வினையும் வாழ்வினையுமோதுங் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்* என்கிற திருவாய்மொழித்தனியனிலே விசதம். இவ்விஷயங்களில் திவ்யப்ரபந்தங்களுக்குப் பரிபூர்ண ஸ்வாதந்த்ர்யம் அப்ரதிஹதம், அவ்யாஹதம், அநபாயம், ப்ரலயேபி அவிசால்யம், அநந்யஸாமாநயம் என்று உத்தமூரர் உணரவேணும். உணர்ந்தீரா ஸ்வாமிந்!.

13. இது கேளீர், விவக்ஷிதார்த்தத்தைச் செவ்வனே வெளியிட முடியாதபடி திக்குமுக்கலாடி நிற்பவர்கள் பலருளர். அன்னவர்களில் அநந்யராய் (அல்லது) அந்யதமராய் விளங்குமிந்த வித்வான் "திவ்ய ப்ரபந்தங்களுக்குப் பூர்ணமான ப்ராமாண்யமில்லை" என விவக்ஷித்து அதைச் செவ்வனே வெளியிடத்தெரியாமல் ஸ்வாதந்த்ர்யமில்லை யென்று எழுதிவைத்தாரென்பது உண்மை. ஆக இவரபிப்ராயத்தால் திவ்ய ப்ரபந்தங்களுக்கு பூர்ண ப்ராமாண்யமில்லை யென்பதுதான் வ்யக்தமாக நின்றது. இவரும் இவருடைய வகுப்பினரும் கொண்டிருக்கிற பலபல அபார்த்தங்கள் திவ்ய ப்ரபந்தப் பாசுரங்களினால் வேரறுக்கப்பட்டொழிந்தனவாதலால் இந்த வருத்தத்தைப் போக்கிக்கொள்ள 'திவ்ய ப்ரபந்தங்கள் ஏதோ சில விஷயங்களில் மட்டும் ப்ரமாணமேயொழிய ஸகலாம்சங்களிலும் ப்ரமாணமன்று' என்றெழுதியும் சொல்லியும் காலங்கழிக்க வேண்டியது தலைவிதியாயிற்று. வித்வத் ஸேவாவிமலமநஸ்கரான வேங்கடேச மஹாகுரு திவ்ய ப்ரபந்தங்களுக்கு முரணான அர்த்தங்களைப் பேணலாகாதென்று தெளிவித்தவராகையாலே "யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வகுலாமோதவாஸிதம், ச்ருதீநாம் விச்ரமாயாலம் சடாரிம் தமுபாஸ்மஹே" என்று நம்மாழ்வாரை உபச்லோகித்தார். இதில் "ச்ருதீநாம் விச்ரமாய அலம்" என்று திருவாய்மொழியைப் பற்றப் பணித்தருளினர். இதற்கு அதிசயோக்தியாகவோ ஆரோபணமாகவோ அர்த்தம் சொல்லவேண்டிய ஆவச்யகதையில்லை. திருவாய்மொழியானது வேதங்களை நோக்கி 'நீங்கள் ஏதுக்கு வீணாக ச்ரமப்படுகிறீர்கள்; நீங்களதிகரித்த காரியத்தைச் செவ்வனே தலைக்கட்ட நான் துணிந்தெழுந்த பிறகு நீங்கள் விச்ரமிப்பது நன்று' என்று தெரிவித்ததாக உண்மை தெளிந்து உரைத்தாராயிற்று. இதையே தாத்பர்யரத்நாவளியில் *யத்தத்க்ருத்யம் ச்ருதீநாம்......ஸார்வபௌமீ* என்று விவரித்தருளிச் செய்தார். பாதுகாஸஹஸ்ரத்தில் "விந்த்யஸ்தம்பாத்......ப்ராசீநாநாம் ச்ருதிபரிஷதாம் பாதுகே! பூர்வகண்யா" என்ற ஸ்ரீஸூக்தி யொன்று போதுமே. ச்ருதிபரிஷதாம் பூர்வகண்யத்வம் திவ்யப்ரபந்தத்திற்கு எதனாலே யென்பதைத் தெரிந்து கொள்ள இவர் இட்டுப் பிறந்தவரல்லரே. ஸ்ரீமதாண்டவன் ஸந்நிதியில் தெரிந்து கொள்வது.

14. இதற்கு மேல் என்ன சொல்லுவர் தெரியுமோ? இங்கெடுத்துக்காட்டிய ப்ரமாணங்கள் எனக்குத் தெரியாதவையோ? இவற்றில் எனக்கு ஏதேனும் விப்ரதிபத்தியுண்டோ? இவற்றில் எனக்கு அநப்யுபகமலேசமுமில்லையே என்பர். பரமவைதிகராயிருந்தவருடைய குமாரரொருவர் பகல் பன்னிரண்டு மணிவரை காதும் பூணூலுமாய்ப் பல்குச்சியிட்டுத் தேய்த்துக் கிடப்பராம்; 'திருத்தகப்பனார் உதயோபஸ்தானம் செய்து போருவரே, நீர் இப்படியா இருப்பது? என்பார்க்கு அவர் விடை கூறுவராம்; மணி பன்னிரண்டானாலும் உதயோபஸ்தானம் தவறுமா என்ன! என்று. அதுவேதான் இங்கு நினைவுக்கு வருகின்றது.

15. நாதமுனிகள் முதலான ஆசார்யர்களின் நியமனம் என்று முன்னே யெழுதிவிட்டு, உடனே "இதனால் அருளிச்செயல்களுக்குப் பூர்ணஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததாகாது" என்றெழுதினவிவர் (இதனால்) என்பதற்கு என்ன பொருள் கொண்டாராக வேணும்? என்று விவேகிகள் விமர்சிக்கவேண்டாமா. நாதமுனிகள் முதலானோர் திவ்ய ப்ரபந்தத்திற்கு வேதவத் ப்ராமாண்யம் கொடுத்ததாகக் கருதக் கூடாது — என்பதேயன்றோ இவர் கொண்ட துராக்ரஹப் பொருள். "பக்தாம்ருதம் விச்வஜநாநு மோதநம் ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோப வாங்மயம், ஸஹஸ்ரசாகோப நிஷத்ஸமாகமம் நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்." என்கிற தனியனருளிச் செய்தவர் நாதமுனிகள்; அவரை உபச்லோகித்த நிகமாந்த குரு "நாதேந முநிநா தேந பவேயம் நாதவாநஹம், யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம் கதம்." என்றார். நாதமுனிகளுக்கு ஹஸ்தாமலகதாம் கதமான நிகமதத்வம் இன்ன தென்பதை உள்ளபடி யுணர்வதற்கு இவர் எத்தனை பிறவி பிறக்க வேணுமோ தான்! இதற்குமேல் இவர் எழுதியுள்ளதெல்லாம் ஜரத்கவாதிவாக்யார்த்தமே.

16. திவ்யப்ரபந்தங்களுக்குப் பூர்ணமான ஸ்வாதந்த்ரியம் கொடுக்கப் படவில்லை யென்றவிவர் தமக்குப் பரிபூர்ணமான ஸ்வாதந்த்ரியம் எதிலுமுண்டென்று அபிமானித்துக்கொண்டு 'நாம் எதையெழுதினாலும் கேட்பாரில்லை' என்றெண்ணிக் கைபோன போக்கில் எழுதி வருகிறார். விரிவுக்கு அஞ்சாமல் விவரிக்கிறேன். வேதவ்யாஸ பகவாந் ப்ரஹ்மஸூத்ரமியற்றினாரென்றெழுதி விட்டு 'இதனையும் வேதாந்தமென்பர்' என்றெழுதுகிறார். இதுவும் ஒரு மருள். ப்ரஹ்மஸூத்ரத்திற்கு சாரீரக மீமாம்ஸை யென்று பெயர். வேதாந்த வாக்கியங்களை மீமாம்ஸிக்கத் தோன்றியவதற்கு வேதாந்த மென்கிற பெயர் கிடையாது, பொருந்தவும் மாட்டாது. வேதாந்த சாஸ்த்ரம் என்னலாம். அப்போது சாகபார்த்திவஸமாஸமாய் [அதாவது மத்யமலோபி ஸமாஸமாய்] வேதாந்தார்த்த விசாரபரம் சாஸ்த்ரம் வேதாந்த சாஸ்த்ரமென்றாகக் கடவது. இந்த ரீதியில் யதீந்த்ரமத தீபிகையும் ஸித்தாந்தஸித்தாஞ்ஜனமும் வேதாந்த சாஸ்த்ர மென்னக் குறையில்லை.

17. இனி அடுத்த விஷயம். வேதாந்தங்கள் எம்பெருமானை நேருக்கு நேராகத் தெரிவிக்கு மென்கிறார். இதில் விளக்கம் மிகமிக வேண்டியிருக்கிறது. எம்பெருமானை நேருக்கு நேராக ப்ரதிபாதிக்கும் ருக்குக்கள் கர்மகாண்டத்திலும் பலவுள்ளன. அவனை நேருக்கு நேராகப் பேசாத பாகங்கள் உபநிஷத்துக்களிலும்

பலவுள. நாராயணாநுவாகத்தில் ''அத்பயஸ் ஸம்பூதோ ஹிரண்யகர்ப்ப இத்யஷ்டௌ" என்று ஓதப்பட்டுள்ளது. *ஹிரண்ய கர்ப்பஸ் ஸமவர்த்ததாக்ரே* என்று தொடங்கியுள்ள எட்டுருக்குக்கள். தைத்திரீய ஸம்ஹிதையில் நாலாவது காண்டத்தில் முதல் ப்ரச்நத்தில் அத்யயனம் செய்யப்பட்டுவருமவை. ஹிரண்ய கர்ப்ப: என்பது நாராயணனை நேருக்கு நேராக எங்ஙனே தொடுமென்று கேட்க வேண்டா; ''ஹிரண்யகர்ப்போ பூகர்ப்ப:'' என்று ஸஹஸ்ரநாமத்தில் விஷ்ணு நாமமாக வோதப்பட்டிருப்பது காண்க. *இதம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேதா நிததே பதம்* இத்யாதிகளான பலபல வாக்யங்கள் கர்மகாண்டத்தில் ஸாக்ஷாத்தாகவே எம்பெருமானைத் தொட்டுச் சொல்லுமவையாக இல்லாமற் போகவில்லை.

18. இங்ஙனமே உபநிஷத்துக்களில் நாராயணனை ஸாக்ஷாத்தாகப் பேசாத வாக்கியங்களும் பலபல வுண்டு. ஸுப்ரஸித்தமான வொருவாக்கியம் காட்டுகிறேன்;—*அக்நே நய ஸுபதா ராயே அஸ்மாந்* என்று தொடங்கும் ருக்கானது ஈசாவாஸ்யோபநிஷத்தில் கடையானது. இதில் அக்நே! என்கிற விளிதானுள்ளது. அக்நி சரீரகனே! என்றபடி. *ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:* என்ற ப்ரஹ்ம ஸூத்ரப்ரக்ரியையுமுண்டு. அது கர்மகாண்டத்துக்கு மொக்கும். கீதையில் (15-15.) *வேதைச் ச ஸர்வைரஹ மேவ வேத்ய:* என்றவிடத்து ஸ்வாமியின் பாஷ்ய ஸ்ரீஸூக்தி—''அக்நி ஸூர்யவாயு ஸோம இந்த்ராதீநாம் மதந்தர்யாமிகத்வேந மதாத்மகத்வாத் தத்ப்ரதிபாதந பரைரபி ஸர்வைர் வேதை: அஹமேவ வேத்ய:; தேவமநுஷ்யாதி சப்தைர் ஜீவாத்மேவ.'' என்றுள்ளது. பட்டர் ''த்வதர்ச்சா விதிமுபரி பரிக்ஷீயதே பூர்வபாக:" என்றும் ''ஊர்த்வோ பாகஸ் த்வதீஹாகுண விபவபரிஜ்ஞாபனைஸ் த்வத்பதாப்தௌ (பரிக்ஷீயதே)" என்றுமருளிச்செய்து ''வேத்யோ வேதைச் ச ஸர்வை ரஹமிதி பகவந்! ஸ்வேந ச வ்யாசகர்த்த" என்று நிகமித்தருளினர். பொதுவாக 'கர்மகாண்டத்திற்கு பகவதாராதனரூப கர்மப்ரதிபாதநே நோக்கு' என்றும், 'வேதாந்தமான உபநிஷத்துக்களுக்கு ப்ரஹ்ம ஸ்வரூப ப்ரதிபாதநே நோக்கு' என்றும் சொல்லவடுக்கும். உத்தமூரர் எழுதுவது—''முன்பாகமான கர்மகாண்டம் ஆராதிக்கப்படும் பல தேவதைகளைக் குறிக்கின்றது'' என்பதாக. இப்படி யெழுதுவது சாஸ்த்ரஜ்ஞஸரணியன்று, க்ராந்திகசைலியுமன்று. ''கர்மகாண்டமானது *ஸ ஆத்மா. அங்காந்யந்யா தேவதா:* என்கிற கணக்கிலே பகவத் சரீரபூதர்களான தேவதைகளின் ஆராதன வேஷத்தைச் சொல்லுகிறது" என்றெழுதுவதே ஸமஞ்ஜஸமாகும். "கர்மகாண்டம் பல தேவதைகளைக் குறிக்கிறது" என்கிறாரிவர். உபநிஷத்துக்களும் பல தேவதைகளைக் குறிப்பதுண்டு; திவ்யப்ரபந்தங்களும் அப்படியே. *ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ் ஸ்வராட்* இத்யாதிகளான வேதாந்த வாக்கியங்களிலே பல தேவதைகளின் குறிப்பு காணவில்லையா? *கடிகமழ்கொன்றைச் சடையனே யென்னும் நான்முகக் கடவுளே யென்னும், வடிவுடைவானோர் தலைவனே யென்னும் *அங்குயர் முக்கட்பிரான் பிரமபெருமானவன் நீ, வெங்கதிர் வச்சிரக்கை இந்திரன் முதலாத் தெய்வம் நீ* என் திருமார்பன் தன்னை என்மலைமகள் கூறன் தன்னை, என்றுமென் நாமகளை அகம்பால் கொண்ட நான்முகனை, நின்ற சசிபதியை நிலங்கீண்டெயில் மூன்றெரித்த......* இவை போன்ற பாசுரங்கள் பலவற்றில் பல தேவதை

கள் குறிக்கப்படுவது காணாநின்றோம். உபநிஷத்துக்கள் நேருக்கு நேராக எம்பெருமானைக் குறிப்பிடுவனவாகில் சாரீரகமீமாம்ஸை அவதரிக்க வேண்டியதே யில்லையே. ப்ராணஜ்யோதிராகாசாதி பரச்சத ஶப்தங்களின் விஷயத்தில் ஸந்தேஹமும் பூர்வபக்ஷமும் விளைந்ததனாலன்றோ ப்ராணாதிகரணம், ஜ்யோதிரதிகரணம், ஆகாசாதிகரணம்........என்றிப்படி பல அதிகரணங்கள் தோன்றியுள்ளன. உபநிஷத்துக்கள் நேருக்கு நேராக நாராயணனைத் தெரிவித்திருந்தால் வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த பரிச்ரமம் வேண்டாவே. *ச்ருதீநாம் விச்ரமாயாலம்* என்ற நிகமாந்த குரு ஸூக்தியில் ச்ருதிசப்தவிவக்ஷிதம் உபநிஷத்பாகமே யென்பதை இவரறியவேணும். ஆனால் அறிவது அரிதே.

## — இடையில் சிறு விஜ்ஞாபனம். —

19. இந்த விமர்ச நூலை, அடியேன் ஸ்ரீ பெரும்பூதூரில் எம்பெருமானார் திருநக்ஷத்ர மஹோத்ஸவாநுபவத்திற்கு விடை கொண்டிருந்த போது ஸ்வாமி திருநக்ஷத்ரத்தன்று எழுதிக் கொண்டிருக்கையில் கடலூர் N. T. யில் அட்வகேட்டாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதுபயவே. திருவஹீந்திரபுரம் T. S. ராமாநுஜாசாரியர் ஸ்வாமி யாத்ருச்சிகமாக அங்கு ஸேவை ஸாதித்து ஒரு நாழிகை வார்த்தையாடியிருந்தார். இந்த ஸ்வாமியினுடைய விவேக சக்தியும் ரஸிக்யமும் நிஷ்பக்ஷபாதத்வமும் அப்ரமேயமென்னுமத்தனை. பல ஸம்வத்ஸரங்களாகத் தொடர்ந்து வருமநுபவத்தினால் இது விஜ்ஞாபித்தபடி. இந்த ஸ்வாமி ப்ரக்ருத விமர்சத்தைப்பற்றித் தெரிந்து கொண்டு ஸாதித்த வார்த்தை—“தேவரீருடைய விமர்சங்களுக்கு இலக்கான வியாஸங்கள் உத்தீர்ணர்களான வித்வான்கள் எழுதியதாகத் தெரியவில்லை; வித்யார்த்திகளின் வியாஸங்களாகவே நினைக்க வேண்டியதாகிறது.” என்பதாம். இவரொருவரே ஸாரக்ராஹியென்று ஸந்தோஷித்தேன். இனி இவர்கள் அந்த மஹானைத் தேடிப்பிடித்து உபாலம்பமோ ஆஹாரமோ நடத்தப்போகின்றார்களே யொழிய உண்மையைத் தெரிவித்தாரென்று உகக்ககில்லார். மத்யே ப்ராஸங்கிகமான விது நிற்க.

20. திருவாய்மொழிக்கு இவர் (உத்தமூரர்) ஏற்றம் தெரிவிக்க வந்தவரா? தாழ்வு தெரிவிக்க வந்தவரா? என்பதொன்றே கேள்வி. “இதனால் அருளிச்செயல்களுக்கு வேதத்தைப் போல் பூர்ணமான ஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததாகாது” என்கிற இவருடைய அவலக்ஷணோக்தியை விரிவாக விமர்சித்தாயிற்று. “உபநிஷத்துக்களை விட திவ்யப்பிரபந்தங்களுக்கு ஒருவகை யேற்ற முண்டு” என்று தொடங்கி “இன்னதென்று நாம் எளிதில் தெளியும்படி சொல்லாமல்” என்று இவர் தாமே யெழுதியிருக்கிற ரீதியிலே ஸ்வயமபி லிகிதம் ஸ்வயம் நஜாநாதியாய்க் காடு பாய்ந்து எழுதிப்போருகின்றார். உபநிஷத்துக்கள் தான் நேருக்கு நேராக எம்பெருமானைச் சொல்லுபவை என்பது ஒருபக்கம்; மற்றொரு பக்கம் கண்டாலோ “உபநிஷத்துக்கள் காரணமான பரதேவதையை இன்னதென்று நாம் எளிதில் தெளியும்படி சொல்லாமல், ஸத் அஸத் ப்ரஹ்மம் ஆத்மா என்றாற் போன்ற பொதுவான பதங்களைக் கொண்டும், சில விடங்களில்........வேறு பொருளையே தரும் பதங்களைக் கொண்டு ஒன்றுக் கொன்று முரண்படுகிற வகையிலும் வர்ணிப்

பதால் நாராயணனே பரதேவதையென்று நன்கறியவாகிறதில்லை.'' என்றெழுதியுள்ளது. ''உபநிஷத்துக்களே நேருக்கு நேராக அவனைச் சொல்லும்'' என்கிற முந்தினவாக்யத்திற்கும், ''உபநிஷத்துக்களால் நாராயணனே பரதேவதையென்று நன்கறியவாகிறதில்லை'' என்கிற பிந்தின வாக்கியத்திற்கும் சிறிதேனும் பொருத்த முண்டா வென்பதை இவர் தமுள்ளமே உணரவேணும். ஒரு சாஸ்த்ரஜ்ஞர் எழுதும் வாக்கியங்களா இவை?

21. இவ்வளவோடும் நிற்கவில்லை; "மற்ற தேவதைகளையுங்கூட இடையிடை கலந்து உபநிஷத்துக்கள் ப்ரஹ்மத்தைச் சொல்லுகின்றபடியால் நிர்ணயம் பெறுகையென்பது எளிதிலாகிறதில்லை. பலவிடங்களில் ஸாங்க்ய யோக மதங்களே கூட சொல்லப்படுமோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது" என்றும் சிறிதும் கை கூசாமல் எழுதியுள்ளார். இவ்வளவு கலுஷமும் கல்மஷமுங்கொண்ட ஞான முடையார் உபயவேதாந்த மென்று சீர்ஷிகையிட்டு எழுதப் புகுந்தது மஹத்தான ஸாஹஸ மென்றல்லது வேறொன்றும் ப்ராமாணிகர்கள் சொல்வதற்கில்லை. சித்தப்ரமமோ! என்று கூட நினைக்கலாகிறதென்றார் ஸ்ரீமதுபயவே. (கோவை) வேதவ்யாஸ பட்டர் ஸ்வாமி.

22, இந்த விநோதத்தைப் பாருங்கள். ஸ்ரீமதாண்டவன் ஷஷ்டியப்த பூர்த்திக் கமிட்டியார் இத்தனை பக்கங்கள் கொண்ட கட்டுரையை எழுதியனுப்ப வேணுமென்று கோரியிருந்தனர் போலும். பக்கங்களை நிரப்ப வேண்டித் திடீரென்று திருப்பல்லாண்டில் *அண்டக்குலத்துக் கதிபதியாகி யென்ற ஐந்தாம் பாட்டைப் பூர்த்தியாக வெழுதி ''இப்பாசுரத்தில் சாரீரகமெனப்படும் ப்ரஹ்மஸூத்ரத்தின் பொருளை அடைவாகக் குறித்துள்ளதுகாண்க" என்றெழுதி மேலே விவரணமும் வெகு அழகாகக் காட்டுகிறார். இங்கே 'ப்ரஹ்மஸூத்ரத்திற்கு அத்யாயங்கள் நான்கு; ஒவ்வோர் அத்யாயத்திற்கும் நான்கு பாதங்கள்'' என்றெழுதி வரிகளை வளர்த்துகிறார் பாவம்! இத்தகைய விஷயங்களினால் பங்க்தி பூரணமோ பத்ரபூரணமோ எவ்வளவும் செய்யட்டும். வ்யாஸருடைய வம்சபரம்பரையையும் அவர் மற்றுமியற்றிய புராணங்களையும் எழுதிக் கொண்டு சென்றாலும் ஏடுகள் நிரம்புமே. அண்டக் குலப்பாசுரத்தில் சாரீரகார்த்த க்ரமம் எங்ஙனே தொடையுண்டு கிடக்கிறதென்பதையன்றோ இவர் ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாக ஸாதிக்க வேணும். அண்டக்குலத்துக் கதிபதியாகி யென்பதனால் ஸ்வசேஷா சேஷார்த்தத்வம் என்கிற முதலத்யாயப் பொருள் ஸங்க்ரஹிக்கப் பட்டு விட்டதாம். 'அசுரரிராக்கதரையிண்டைக் குலத்தை யெடுத்துக் களைந்த' என்பதனால் பாஹ்ய குத்ருஷ்டி மதங்களை யெடுத்துக் களைந்த இரண்டாமத்யாயத்தின் பொருள் ஸங்க்ரஹிக்கப் பட்டு விட்டதாம்.........இப்படி அத்புதமான நிர்வாஹமும் ஸமந்வயமும் காட்டுகின்ற மேதாவிலாஸத்திற்கும் ப்ரதிபாவிப்ரமத்திற்கும் கண்ணெச்சில் வாராதபடி எத்தனை மணங்கு கற்பூரங் கொளுத்திப் போடலாமென்று தெரியவில்லையே!

23. அண்டக் குலத்துக்கு என்று அகாரத்தை முதலிட்டுத் தொடங்கினபடியாலே சாரீரகத்தின் முதல் ஸூத்ரம். (சூ) என்று அகாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது தெரிவிக்கப் படுகிறது. மறுபடியும அதிபதி யென்று அகாரமே ஆரம்பிக்கப்

பட்டபடியால் அந்த ஸூத்ரத்திலேயே (அத:) என்று அகாரத்திலாரம்பித்ததும் தெரிவிக்கப்படுகிறது. அதன்மேல் (ஆகி) என்பதில் ஆகாரமானது அந்த ஸூத்ரத்தின் முடிவில் (ஜிஜ்ஞாஸா) என்று ஆகாரமிருப்பது காட்டப்பட்டது. சிலர் (அதா தோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸ்யம்) என்று பாடங்கொண்டு நான்கு பதமாக வைத்து வியாக்கியானம் செய்திருப்பதால் அது தவறென்று காட்டப்படுகிறது. எப்படியென்றால் (ஆகி) யென்பதில் (ஆ) என்பது ஆகாராந்தமாகவே ஸூத்ர சரீரமிருக்க வேணுமென்று காட்டிவிட்டது. அதன் பக்கத்திலுள்ள (கி) என்னு மெழுத்து க. கா. கி என்று மூன்றுமெழுத் தாகையாலே மூன்றே பதமாகத்தான் முதல் ஸூத்ரமிருக்க வேணும், நான்குபதமாகக் கொள்ளும் பாடம் தவறு என்று காட்டிவிட்டது .... என்றிங்ஙனே பல நுட்பங்கள் காட்டியிருக்கலாம். வியாகரணத்தில் ஸூடநபும்ஸகஸ்ய என்பது ஒரு ஸூத்ரம்; இதற்கு என்ன பொருள்? என்று வினவப்பட்ட மத்வாசார் ஒருவர் "ஸூத்ரேஷு அத்ருஷ்டம் பதம் ஸூத்ராந்தராத் அநுவர்த்தநீயம் என்று சாஸனமாகையாலே *ஜந்மாத்யஸ்ய யத:* என்கிற ஸூத்ரத்திலிருந்து ஜந்ம என்கிற பதத்தை இங்கே கொண்டு கூட்டி 'நபும்ஸகஸ்ய ஜன்ம ஸூட— [illegible]" என்றாராம். கிம் கநிஷ்ட: கிமு ஜ்யேஷ்டஸ் தஸ்யா ஸாவுத்தமூர் மஹாந்.

24. ஸ்ம்ருதஸ்ய உபேக்ஷா நர்ஹத்வாத் மற்றொன்றும் தெரிவிக்கக் கேண்மின். ஒரு மஹாமேதாவி ராமாயணம் சொல்லுகிறேனென்று தொடங்கினார். ரா—மா ய.ண. என்கிற நாலெழுத்தில் ராமாயண கதை முழுவதையும் விளக்கிக் காட்டுவதாக ப்ரதிஜ்ஞை செய்து அப்படியே காட்டி முடித்தார். எங்ஙனே யென்னில்; ராமாயணம் என்பதில் முதலெழுத்தான ரா என்பதற்கு தெலுங்கு பாஷையில் வா என்று பொருள். இதனால் வால்மீகி தான் ராமாயண கர்த்தா என்று காட்டப்பட்டது. அந்த வா என்பதற்கு ஆங்கிலத்தில் (கம்) என்பது. அதனால் கம்பரும் ஒரு ராமாயண கர்த்தா என்று தேறியது. ஆக (ரா) என்பதிலிருந்து இவ்வளவு அருமையான விசேஷம் தெலுங்கையும் ஆங்கிலத்தையும் தொட்டுக் காட்டப்பட்டது. (ரா) என்பதில் ராக்ஷஸகுலம் மாண்ட கதையும் ராக்ஷஸர்களின் உத்தரராமாயணகதையுங்கூட ஸூசிதம்.

25. இதற்குமேல் (மா) என்கிற எழுத்தை எடுத்துக்கொண்டராமா என்பதற்கு வேண்டாமென்றுபொருள். அதில் (வே) என்கிற முதலெழுத்தினால் வேடன் நினைவூட்டப்படுகிறான். ராமாயணத்துக்கு வேடன்கதைதானே மூலம். சோகமே ச்லோகமாவதற்கு வேடன் வேலைதானே மூலமாச்சுது. அதை (மா) என்பது தெரிவித்தது. வேடனான குஹன் கதையும் சபரியின் கதையும் கொள்க. (மா) என்பதனால் *மாநிஷாதச்லோகம் நினைப்பூட்டப்படுகிறதென்றும் கொள்ளலாம். இனி (ய) என்கிற மூன்றாவதான எழுத்து மகாரத்துக்கு அடுத்ததாகையால் 26வது எழுத்து. 26ல் இரண்டையும் ஆறையும் கூட்டினால் எட்டாச்சுது. எட்டுஎன்பது அஷ்டமி. அஷ்டமிதிதி கழிந்தால் நவமி வந்துதானே யாக வேண்டும். அந்த நவமியில் ராமனவதாரமென்று காட்டியாச்சுது. தவிரவும், (வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா) என்றது. வேதமென்

பது வேதாந்தம். அதில் எதுமுக்கியமான வாக்கியமென்ருல் (யதோ வா இமாநி பூதாநிஜாயந்தே) என்பது தான். அதுதானே முதன்முதலான விஷயவாக்கியம். அதில் முதலாவதான யகாரத்தை இந்த யகாரம் காட்டுகிறதென்பது எவ்வளவோ நுட்பமான விஷயமென்று கொள்ளவேணும். (ய) என்பதற்கு அனேக அர்த்தங்கள் அற்புதமாகச் சொல்லலாம். யஜ்ஞத்திலிருந்து உதித்த ஹவிஸ்ஸினுல் தோன்றினவர்கதை. யஜ்ஞத்தை (விச்வாமித்ரருடையதை) காப்பாற்றினவர் கதை. யத்னமெல்லாம் விபலமாய்ப்போனகதை. நநு, மந்தரையினுடைய யத்தனம் விபலமாய்ப்போக வில்லையே, மாரீசனுடைய யத்தனம் விபலமாய்ப் போகவில்லையே யென்னில், நல்ல யத்னங்கள் விபலமாகுமேயொழிய கெட்ட யத்னங்கள் விபலமாகாது என்பதுசாரம். இதற்குமேல் (ண) என்கிற எழுத்துக்கு விவரணம். (ண) என்கிற எழுத்து டவர்க்க பஞ்சமமாகையாலே பதினைந்து என்கிற லக்கத்தைச் சொல்லும். பதினுலாண்டுகள் கழித்துப் பதினஞ்சாவது ஆண்டு பிறந்தால்தான் காட்டில் நின்று திரும்பி வருவேனென்று கடுமையாகச் சொன்னவர் கதை என்று பொருள். பதினுலு வருஷந்தானே வனவாஸஞ்செய்தது, 15 என்று எதற்காகச் சொல்லவேணுமென்னில், "ந தே மநுஷ்யா தேவாஸ் தே.........வர்ஷே பஞ்சதசே புந:" என்கிற தசரத ச்லோகத்தில் சதுர்தசே என்னுதே பஞ்சதசே என்றதைப் பார்க்கவேணும். மற்றொரு விவரணமும் கேளீர்.

26. *கமப்யாத்யம் குரும் வந்தே* என்கிற யதிராஜஸப்ததிஸூக்திக்கு ஒரு மஹான் வியாக்கியானமெழுதியிருந்தார்—கம் என்கிற முதல் பதத்தாலே (கம்ஸஹவம்ஸஹ) என்றச் சாந்தோக்யச்ருதி ப்ரத்யபிஜ்ஞாபிதம். (அபி) *அபிஸ்மர்யதே* என்கிற ப்ரஹ்மஸூத்ரம். (ஆத்யம்)* ஆத்யஸ்ய ந: குலபதே:* (குரும்) *குரும்ப்ரகாசயேத்தீமாந்* (வந்தே) *யதீந்த்ரப்ரவணம் வந்தே* இத்யாதி. நமது வித்வானுடைய விவரணங்களும் இதே ரீதிதான். இன்னது சொன்னேம், இன்னது எழுதினேம் என்று தாமுமறியாதே தமரு மறியாதே ஏடுகளை நிரப்ப எதையோ எழுதிவிட்டு "இவையெல்லாம் பழைய வியாக்கியானங்களையெல்லாமாராய்ந்து நாம் எழுதியது" என்று கூசாதே யெழுதுகிருரந்தோ! இவராதரிக்கும் பழைய வியாக்கியானங்கள் எவையோ? அஸம்பத்தமென்று இங்கு நாம் கழித்த அர்த்தங்கள் எந்தபழைய வியாக்கியானத்தி லுள்ளனவென்று இவர்காட்டித்தீர வேண்டும். காட்டாதவரையில் விப்ரலம்பகரேயாவர். *வ்ருச்சிகதஷ்டமலிம்லுச ந்யாயேந. ஜீவிப்பார்க்கு 'நம் ஸ்வாமி சாந்தர், பரமசாந்தர், ஜிதக்ரோதர் என்று அந்தேவாஸிகள்சூட்டும் புகழுரைமாலைகளே சோபாதிசயாவஹமாகும்.

27. சென்ற ஸம்வத்ஸரத்தில் ஒரு மஹநீயர்க்கு நடந்த ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்திற்காக வெளிவந்த மணிவிழாமலரில் "வ்யாஸமஹர்ஷியும் வைஷ்ணவமும்" என்னும் வியாஸம் இவருடையது வெளிவந்தது. அந்தஸமயத்தில் நாமெழுதிய [ஸ்ரீராமாநுஜன் 214ல் வெளியிட்ட] விலக்ஷண ஜகதுபகாரமென்னும் நூலில் இந்த ஸ்வாமி அவசியம் விடையிறுத்துத் தீரவேண்டிய பல விஷயங்கள் வரைந்துள்ளோம். அதிலிருந்து முக்கியமான சிலவற்றை இங்கு அநுவதிக்கிருேம். எதற்காக? அஸம்பத்தமென்று நாமெடுத்துக் காட்டினே

மாகில் அஞ்ஜலிபந்த மொன்றிலேயே அவை ஸமாதேயங்கள்' என்று ப்ராமாணிகர்கள் கொண்டிருக்கும்கொள்கையைத் திடப்படுத்துவதற்காக.

இனி அநுவாதம். (உத்தமூரர்) "விஷ்ணுநாராயணேதி சப்தங்களில் ஒரு பெயரையும் ஸூத்ரத்தில் குறிக்கவில்லையே. அப்படியிருக்க விஷ்ணுவையே பரதேவதையாக ஸூத்ரம் கருதுமென்ன முடியுமோ?' என்றொரு சங்கையைக் கிளப்பிக்கொண்டு [இதற்கு விடை] என்று கம்பீரமாகத் தொடங்கி வழ வழ கொழ கொழ பண்ணி முடித்திருக்கிறார். பிரமன் சிவன் முதலானவருடைய பெயரைக்கூட குறிப்பிடவில்லை என்றொரு ஸமாதானம். பரதத்வமே கிடையாதென்று கருத்தானால் ப்ரஹ்மஸூத்ரமே வேண்டாமே யென்று ஒரு ஸமாதானம். ஏதோவொன்றை அவர் பரதத்துவமாகக் கூறியிருக்கிறார். என்றொரு ஸமாதானம். அதை இன்னதென்று நேர் சொல்லாலே சொல்லவில்லையென்று ஒரு முடிவு. நேர்சொல்லாலே ஏன் சொல்லவில்லையென்று கேட்டுக் கொண்டு சொல்லாமலே விளங்குமென்று ஸூத்ரகாரருடைய அபிப்ராயமென்று ஸமாதானம். இதற்குமேல் ஸூத்ரகாரர் கையாண்ட உபநிஷத் வாக்கியங்களிலே அவர் நிர்ணயம் செய்த பொருளைக் கொண்டு பார்க்க வேணுமென்கிறார். பண்டிதர்களே! ப்ரஹ்ம ஸூத்ரத்தில் 'ஒரு ஸூத்ரத்திலாவது ஒரு உபநிஷத்வாக்யத்தையாவது கையாண்டிருப்பதுண்டா? (அம்சாதிகரணத்தில்) 'தாசகிதவாதித்வ மதீயத ஏகே' என்றாப்போலே சில ஸூத்ரங்களில் உபநிஷத் பதங்களுக்கு ஸூசனையிருப்பதாகக் கொள்ளுவோம். உபநிஷத் வாக்கியத்தைக் கையாண்டவிடம் காட்டவே முடியாது. தேசிகன் சததூஷணியில் அத்வைதிகளின் ப்ரஹ்மம் சாரீரகமீமாம்ஸையின் பஞ்சமாத்யாயத்திலிருப்பதாக ஸாதிக்கிறார். அந்த அத்யாயத்திலேயே உபநிஷத் வாக்கியங்களை வியாஸர் கையாண்டிருப்பர் போலும். அவர் செய்திருக்கிற ப்ரஸித்தமான நான்கு அத்யாயங்களில் கையாளவில்லை யென்பது கல்வெட்டு. ஒரு சித்ரவதம்;—வியாஸர் உபநிஷத்துக்கள் பலவற்றை விசாரிக்கின்றவர் புருஷ ஸூக்தம் யாரைச்சொல்லுகிறதென்பதை விசாரிக்கவேயில்லை; அது மட்டுமல்ல; ஜ்யோதிரதிகரணத்தில் ஒரு வாக்கியத்தை விசாரிக்கும்போது இங்கே பகவானுடைய நான்கு பாதங்களைச் சொல்லும் புருஷஸூக்த மந்த்ரம் இருப்பதாலே இங்கே ப்ரஹ்மமே சொல்லப்படவேண்டுமென்றார்... புருஷ ஸூக்த மந்த்ரத்தையும் எடுத்துக்காட்டினராகையாலே ஸம்சயத்திற்கு இடமேயில்லை" என்றெழுதுகிறார். ஒரு சாஸ்த்ரஜ்ஞன் எழுதுகிற பங்க்தியா இது? ஜ்யோதிரதிகரணத்திலோ மற்று எந்த அதிகரணத்திலோ ஔபநிஷத ப்ரமாணங்களுக்கு ஸூசனையுண்டு—ப்ரத்யபிஜ்ஞாபனமுண்டு என்று சொல்ல இயலுமேயல்லது 'உபநிஷத் வாக்யங்களைக் கையாளுகிறார்—கையாண்டார்' என்று பண்டிதர் எழுதத்தகுமா? இதற்குமேலெழுதுகிறார்—'மேலும் மஹர்ஷிகளைப்போலே நாமும் நமக்குக்கிடைத்த உபநிஷத்துக்களைக் கொண்டே தத்வநிர்ணயம் செய்ய முற்படவேண்டுமென்று; செய்யட்டுமே தாராளமாக. யார் வேண்டாமென்று தடுப்பார்? இதற்கு ஸூத்ரகாரரைப் பிடித்திழுத்து அவர் தம்முடைய மீமாம்ஸையில் தேவதாவிசேஷநிஷ்கர்ஷம் பண்ணினவ

ரல்லர் என்று பண்டிதர் பாமரர் அனைவரும் நிர்ணயிக்கும்படியாகவா ஒரு பண்டிதர் எழுதுவது? இங்கே எழுதுகிறார் "ஸாங்க்யாதி மதங்களிற் சொன்ன ப்ரக்ருதியோ ஜீவனோ ஜகத்காரணமில்லை யென்று தேறும்'' என்று. இங்கே நிருபகர்கள் நுட்பமாகப் பார்க்கவேண்டாம்; ஸ்தூலமாகப் பார்த்தாலே போதும். இல்லை என்பதை எங்கே ப்ரயோகிப்பது? அல்ல என்பதை எங்கே ப்ரயோகிப்பது என்கிற சிறு விஷயங்கூட அறியாமலன்றோ இவர் பல வெள்ளைத் தாள்களைக் கறுப்பாக்கிவருகிறார். அந்யோந்யாபாவத்திற்கும் மற்றைய அபாவத்திற்கும் வாசிகாணமாட்டாதவிவர் தருக்கக்கடலாம் செருக்குக்கடலாகயிருக்லாம். 'பூதலே கடோ நாஸ்தி' என்னலாம். 'கட: படோ நாஸ்தி. என்னக்கூடாதென்பதை இனித்தான் இவர் கற்கத் தொடங்கவேணும். ''ப்ரக்ருதிர் வா ஜீவோ வா ஜகத்காரணம் ந பவதி" என்ன வேண்டுமிடத்தில் ''ப்ரக்ருதிர் வா ஜீவோ வா ஜகத்காரணம் நாஸ்தி'' என்று சொல்லலாகாது. தேவதத்தன் யோக்யனல்லன் என்ன வேணும், தேவதத்தன் யோக்யனில்லை யென்னக் கூடாது. தேவதத்தனுக்கு யோக்யதையில்லை என்னலாம். இத்தகைய சாஸ்திர மர்யாதைகளை இனியாவது தெரிந்துகொள்க. இதேயிடத்தில் ''மிரண்டுவிடக் கூடாது'' என்கிறார். பள்ளிப் பிச்சான் வழங்கிவரும் சொற்களைக்கூட அகராதிகளில் எழுதிவைப்பதுண்டு. அதைக்கண்டு மருண்டுவிடக்கூடாது. பெரியாழ்வார் ''மருண்டு மான் கணங்கள் மேய்கைமறந்து மேய்ந்த புல்லும்'' என்றருளிச் செய்கிறார். இங்கே ''மிரண்டு மான் கணங்கள்" என்றிருந்தால் மோனையின்பத்திற்கு மிகமிகச் சேரும். இவர் அப்படியும் திருத்திவிடுவர். வழிப்போக்கர்கள் மெறண்டு என்றுதான் சொல்லுவது' லேகினியைக் கையால் தொடவும் அதிகாரமற்றவர்கள் எத்தனை பேல்காகிதங்களைகி கறுப்பாக்கி வருகிறார்களந்தோ!

மேலும் எழுதுகிறார் 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா என்ற ஸமாஸத்தில் நான்முகனைக் கொள்ளலாம்......' இத்யாதி. அப்படி கொண்டாலும் "ப்ரஹ்மணோ ஜிஜ்ஞாஸா'' என்றுதானே விக்ரஹிக்கவேணும். அது பும்லிங்கமேயொழிய க்லீபமன்று' என்று ஒருவர் சொன்னால் சொன்னதுதானே. இங்கு விஷயமென்னவென்றால் 'ப்ரஹ்ம சப்தார்த்தமாக நான்முகனைக் கொள்ளலாம்' என்றெழுதுவதே பொருந்தும். 'ஸமாஸத்தில்' என்பது பண்டித பாஷிதமாகாது; ஸமாஸம் இங்கு வ்யாவர்த்தகமன்றே; வ்யஸ்தமாகச் சொல்லியிருந்தாலும் நான்முகப்பொருள் போய்விடாதே. ப்ரஹ்மா என்று பும்லிங்கமாகவுள்ளவிடங்களிலுங்கூட திசைமுகனைத் தள்ளித் திசைமுகனார் தங்களப்பனைப் பொருளாகப் பகரவில்லையா? *ஸஹ யஜ்ஞை: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: * என்ற கீதையில் ப்ரஜாபதி சப்தத்திற்கு சதுர்முகபரமான பாஷ்யம் சங்கரருடையது. தஜ்ஜநக பரமான பாஷ்யம் எம்பெருமானாருடையது. *ஜந்மாத்யஸ்ய யத: * என்கிற ஸூத்ரம் மூன்று பதந்தானென்பதை யிசைந்துகொண்டு 'ஜந்ம-ஆத்யஸ்ய-யத:" என்று இங்ஙனே மூன்று பதமாகப் பிரித்து, ஆத்யனான பரமபுருஷனுக்கு எந்த தசரத வஸுதேவாதிகளிடமிருந்து உத்பத்தியோ. அந்த தசரத வஸுதேவாதிகளே பரப்ரஹ்மம்

என்று ஸூத்ரார்த்தமாகச் சிலர் பாஷ்யம் செய்திருக்கிறார்களே அதைக் காணவில்லையோ? காட்டவில்லையே? கண்டிருந்தால் காட்டியேயிருப்பர். (இதுவும் அநுவாதம்.) ஸ்ரீராமாயணத்தில் 'ஆத்மவாந் க:' என்ற விடத்து வியாக்கியானங்களில் "ஆத்மா ஜீவே த்ருதௌ தேஹே ஸ்வபாவே பரமாத்மநி" "ஆத்மா ஸ்வபாவே தேஹே ச ஜீவாத்ம பரமாத்மநோ:" என்கிற கோசங்களை உதாஹரித்திருக்கையாலே சாரீரகமீமாம்ஸையில் வாக்யாந்வயாதிகரணத்திற்கு உத்திதியே யில்லையென்றும், ஆச்மரத்ய ஔடுலோமி காசக்ருத்ஸ்நர்களின் பேச்சுக்கு ப்ரமேயமேயில்லை யென்றும் கிளப்பிவிட்டு விடைகூறினால் அது லோகோபகாரமாகும். சக்திக்ரஹத்தில் கோசம் ப்ரபலப்ரமாணமே யாதலால் ஆத்மா என்கிற சொல் ஜீவாத்மாவைப் போலே பரமாத்மாவையும் சொல்லக்கடவ தாகையால் ''ஆத்மநஸ் து காமாய—ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:' என்னுமிடங்களில் பரமாத்மாவைக் கொள்ளுவதுதான் பொருத்தம்—என்று ஒரேபேச்சில் முடிக்கவேண்டியதை விட்டு, ஆச்மரத்யர் அப்படி சொல்லுகிறார், ஔடுலோமி இப்படி சொல்லுகிறார், காசக்ருத்ஸ்நர் அங்ஙனே சொல்லுகிறார்-என்பதும், காசக்ருத்ஸ்நருடைய முடிவை ஸித்தாந்தமாக இரு மதத்தினருங் கொண்டும் விவாதத்தையே அநுவர்த்திக்கச் செய்வதும் எதற்காகவென்று கேட்டுக்கொண்டு விடை கூறினால் எவ்வளவோ உபகாரமாகுமே. அவசியமற்ற சோத்யங்களைக் கிளப்பி ருஜுவானவிடை கூறமாட்டாதே குழப்பிவைக்கும் வியாஸங்களை வெளியிடுவதனால் என்ன ஜகதுபகாரமோ அறிகின்றிலோம். ஸூத்ரகாரர் விஷ்ணுநாராயணாதி நாமங்களை ஏன்தொடவில்லை யென்றுகேட்டுக்கொண்டு இவர் காடுபாய்ந்தாப்போலே, ப்ரஹ்மசப்தார்த்த மருளிச்செய்கிற நம் பாஷ்யகாரர் ''ப்ரஹ்ம சப்தேந புருஷோத்தமோபிதீயதே'' என்றும் ''ஸச ஸர்வேச்வர ஏவ'' என்றும் ஸாதித்தாரேயொழிய "விஷ்ணுரபிதீயதே" "நாராயண ஏவ" என்று ஏன் அருளிச்செய்யவில்லை யென்று கேட்டுக்கொண்டும் ஒரு பெருங்காட்டில் பாய்ந்திருக்கலாமே. க்ராந்திக ஸரணியறியாமே வ்ருதா ச்ரம; கிமர்த்தம்? இவ்வளவோடு இதனை விட்டிடுவோம். ........

(ஆக இவ்வளவும் இவரைப்பற்றி முன்பு நாமெழுதியவற்றின் அநுவாதம். ஆக, உத்தமூர் வித்வானுடைய வியாஸத்தைப்பற்றி ஏற்கெனவே (சென்ற ஸம்வத்ஸரத்தில்) நாமெழுதியவற்றில் ஒரு பகுதியும் இப்போது உபய வேதாந்த வியாஸ விமர்சமாக எழுதியவையும் நிர்மத்ஸரர்களாய் நிஷ்பக்ஷபாதர்களாய்ப் பரிசீலிக்கக்கூடிய ப்ராஜ்ஞர்களுக்கு இங்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. இது "குண தோஷௌ புதோ க்ருஹ்ணந்' என்கிற ஸுபாஷிதத்திற்கு விருத்தமான செய்கையேயாயினும் லோகோபகாரமொன்றையே கருதிச்செய்ததாதலால் கொள்ளத் துணிந்தாலும் கோதென்றிகழ்ந்தாலும் எள்ளத்தனையுகவாதிகழா தென்னெஞ்சகமெறு நிற்கிறேன்.

உத்தமூரர் வியாஸவிமர்சம் முற்றிற்று.

## 2. விசிஷ்டாத்வைத வ்யாஸ விமர்சம்.

உபய வேதாந்த வியாஸத்திற்கு அடுத்தது விசிஷ்டாத்வைத வியாஸம். இது ஸ்ரீ. உப. வே. பண்டிதராஜ. திருவரங்கம் ஸ்வாமியினுடையது. லேகன வைகரீசிக்ஷணம் சிறிது செய்யவேண்டியதாகிறது இதில். நையாயிகாதிகள் அநுமாநத்தினால் பகவான் இருப்பதாக ஸாதிக்கின்றார்கள் என்றெழுதிவிட்டு, "ஆனால் அதைப் பலர் மறுக்கின்றார்கள்" என்று தொடங்கி "வலுவான ஆக்ஷேபம் செய்கின்றனர்.........ஸர்வேச்வரனை வேத சாஸ்த்ரமூலமாகவே அறிய வேண்டுமென்கின்றனர்" என்று அந்த வாக்கியத்தை முடித்திருக்கின்றார். இத்தகைய கட்டுரைகள் எழுதுவது முக்கியமாக அபூபுத்தர்களுக்காகவேயன்றி பூபுத்தர்களுக்காகவன்றே. முன்னம் நையாயிகர் முதலானோர் என்று விசேஷித்து எழுதினதற்குச் சேர அடுத்தபடி வேதாந்திகள் என்றெழுதவேண்டும். 'பலர் மறுக்கின்றார்கள்" என்றும் "வலுவான ஆக்ஷேபம் செய்கின்றனர்" என்றும் தெரிவித்ததானது விசிஷ்டாத்வைதிகளுக்கு அபிமதமா? அநபிமதமா? என்பது காட்டப்படவில்லை. மறுக்கின்றார்கள், ஆக்ஷேபிக்கின்றார்கள் என்றெழுதுவதனால் துர்வாதிகள் செய்யும் மறுப்புகளிலும் ஆக்ஷேபங்களிலும் இவையும் சேர்ந்தவை என்று அவரவர்கள் எண்ணக்கூடுமேயல்லது 'இதுதான் வேதாந்திகளின் ஸித்தாந்தம்' என்று தெரிந்துகொள்வதற்கு வழியில்லை. இந்த ஸித்தாந்தம் உள்ளபடி எவர்க்குத் தெரியுமோ அவர்கட்கு இக்கட்டுரை பயனற்றதாம். தெரியாதவர்கட்கு இதனால் பயனில்லையாம். இங்ஙனே யெழுதிப் போருவதை ஒரு கம்பீரஸரணியாகக் கொள்வது விரும்பத்தக்கதாகாது. விஷயம் தெளிவாகக் காட்டப்படவேண்டும். 'கண்டோம், காண்போம்' என்கிற நவீனபரிபாஷாநுகரணமும் வெறுக்கத்தக்கதே.

தீர்மானித்தலென்கிற பதம் அஸக்ருத் கையாளப்படுகிறது. இச்சொல் நீதிமன்றங்களில் நடையாடும். ஸ்ரீமதாண்டவன் கடாக்ஷித்தருளவெழுதும் வியாஸங்களில் இது கையாளத்தக்கதன்று. ஆரியர்கள் ஆதரிக்கும் சொல்லன்றிது. இத்யலம். இதி விரம்யதே. ... ... ... (*)

## 3. ஆசார்ய மஹிம விமர்சம்.

ஸ்ரீ. உ. வே. மதுராந்தகம் வித்வான் ஸ்வாமியின் கட்டுரையில்—"தேவ" என்கிற சப்தத்திற்குப் பத்து விதமான பொருளுண்டு; அவையாவையும் ஆசார்யன் பக்கலிலும் பொருந்தியவை என்கிற யுக்தி அழகியதே. க்ரீடாவிஜிகீஷாத்யர்த்தங்களை நிரூபித்திருக்கும்வழி சுவையற்றது. ஸமய விசேஷே ஸ்ரீராமாநுஜனில் சுவைமிக்க விவரணம் வெளிவரும். ஆனாலும் இங்கு ஸம்க்ஷேபமாகச் சிறிது எழுதுவோம். திவு தாதுவுக்குப் பத்து அர்த்தங்கள் பகரப்படுகின்றன.

அவற்றுள் முதலர்த்தம் க்ரீடை. அதாவது விளையாட்டு. இது எம்பெருமானுக்கும் ஆசார்யனுக்கும் வாசியற்றதென்னுமிடத்தை நன்கு நிரூபிக்கிறேன். எம்பெருமானுடைய விளையாட்டு லௌகிகமும் வைதிகமுமாக இருவகைப்பட்டிருக்கும். இவ்விருவகையான விளையாட்டையும் ஆழ்வார்களும் ஆண்டாளும் ஆசாரியர்களும் பேசி யநுபவிக்கிறார்கள். முந்தின விளையாட்டைப்பற்றி முன்னம் கேண்மின்.

2. திருவாய்மொழியில் மின்னிடை மடவாரிலே *என்னுடைய பந்துங்கழலும் தந்துபோகு நம்பீ* *எம் குழறுபூவையொடுங் கிளியோடுங் குழகேலே* *வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி* என்றிவை முதலான பாசுரங்களினால் *கண்ணனென்னுங் கருந்தெய்வத்தின் விளையாட்டு அற்புதமாக அநுபவிக்கப்பட்டது. *போகத்தில் வழுவாத புதுவையர்கோன்* என்று அநுபவபாக்ய ஸீமா பூமியாகப் பேசப்பட்ட பெரியாழ்வார் அநுபவித்த விளையாட்டுகள் இருநூற்றறுபது பாசுரங்களாக விரிந்துள்ளன. ஆண்டாளும் *நாமமாயிரம்* *கோழியழைப்பதன் முன்னம்*முதலிய திருமொழிகளில் *வீதிவாய் விளையாடு மாயர் சிறுமியரோடு விளையாடினபடிகளையும் *தோழியும் நானும் தொழுதோமென்னப்பண்ணி விளையாடினபடிகளையும் பரக்கப்பேசி யநுபவித்தாள். *கன்னியரோடெங்கள் நம்பி கரியபிரான் விளையாட்டை* என்றே தலைக்கட்டினாள். முடிவில்* பட்டிமேய்ந்தோர் காரேறு.பதிகத்தில் *பலதேவற்கோர் கீழ்க்கன்றாய் விளையாடக் கண்டீர்களோ? என்று வினவுவதும், *இட்டமான பசுக்களை யினிது மறித்து நீரூட்டிவிட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே* என்று விடையிறுப்பது மாய்ப் போந்தது லௌகிகலீலாநுபவம். மேலே *நாட்டைப் படையென்றயன் முதலாத் தந்த நளிர்மாமலருந்தி வீட்டைப்பண்ணி விளையாடும் விமலன்* என்று வைதிகமான விளையாட்டையும் ஆஸ்தாவித்தாள். நம்மாழ்வாரும் *மன்பல்லுயிர்களுமாகிப் பலபல மாய மயக்குக்களால் இன்புறுமிவ்விளையாட்டுடையான்* என்று வைதிகலீலையையும் பேசினார். பெரியாழ்வார் *வண்டுகளித்திரைக்கும் பொழில் சூழ் வருபுனற்காவிரித் தென்னரங்கன், பண்டவன்செய்த கிரீடையெல்லாம்* என்று ஸாமாந்யேந வைதிகலௌகிக உபயக்ரீடைகளையும் திருவுள்ளம்பற்றினார். மஹர்ஷிகளும் *த்வம் ந்யஞ்சத்பிருதஞ்சத்பி: கர்மஸூத்ரோபபாதிதை:, ஹரே! விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:.* என்று மருமமாகச் சொல்லிவைத்தார்கள். சாரீரகமீமாம்ஸையில் * ந ப்ரயோஜநவத்த்வாத்* என்கிற பூர்வபக்ஷஸூத்ரத்தின் மேல் அவதரித்த *லோகவத் து லீலா கைவல்யம்* என்கிற ஸித்தாந்தஸூத்ரமும் லீலையைப் பேசிநின்றது. கூரத்தாழ்வான் (ஸ்ரீஸ்தவம்) *ஸ்வஸ்தி ஸ்ரீர் திசதாத் அசேஷஜகதாம்* என்று தொடங்கி "க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாத் ஐகரஸ்யாத் தயா" என்று தலைக்கட்டினார். பட்டர் * ஆலயஸமயஸம்பத்தம்* என்று தொடங்கி *அநுசிகிநி சிகீவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்* என்றருளிச் செய்தார். நடாதூரம்மாள் *வேதாந்தேஷண* என்று தொடங்கி *அதிபாபகம் ஸநிதநம் யத்க்ரீடிதம் தம் நும:* என்றருளிச்செய்தார். இவ்வண்ணமாக எம்பெருமானுடைய க்ரீடைகளை உபபாதிப்பதில் சிரமமில்லை; இனி ஆசார்யனுடைய க்ரீடையின் உபபாதனம் கேளீர். இதுவன்றோ ப்ரக்ருதம் முக்கியமானது.

3. எம்பெருமான் ஸ்ருஷ்டிபண்ணுவதுபோல் ஆசார்யனும் ஸ்ருஷ்டிபண்ணுகிறார்; "சரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:; ஸ ஹி வித்யாதஸ் தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம." என்ற ஸூத்ரத்தில் (ஸ:) என்றது ஆசார்யனையேயன்றோ. இப்படி பண்ணும் ஸ்ருஷ்டியை லீலையாக—அவலீலையாகச் செய்பவன் ஆசார்யன். *கலைகளும் வேதமும் நீதிநூலும்* என்கிற பாசுரத்திற்படியே எம்பெருமான் வேதம் முதலிய சாஸ்த்ரங்களை மூலம் மட்டுமே கொடுத்தான்; ஆசார்யனோ வென்னில் அவற்றை அர்த்தத்தோடுங் கொடுத்தான். அங்ஙனம் கொடுத்தருள்வது சிரமப்பட்டோவென்னில், அன்று, அவலீலையாகக் கொடுத்தருள்வன். அருளாளப் பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்த ஞானஸாரத்தின் முடிவில் *அல்லிமலர்ப் பாவைக்கு அன்பரடிக்கன்பர், சொல்லும் அவிடு கருதியாம்* என்னும் பாசுரம் ரஹஸ்யத்ரயஸாரத்திலுமுதாஹரிக்கப்படுகிறது. இதில் அவிடு என்பதற்கு விளையாட்டு வார்த்தையென்று பொருள். * வேதசாஸ்த்ரரதாரூடா: ஜ்ஞாநகட்கதரா த்விஜா:, க்ரீடார்த்தமபி யத் ப்ரூயுஸ் ஸ தர்ம: பரமோ மத:.* என்கிற ஆர்ஷப்ரமாணத்திற்கு ஆதிச்சந்தமான பாசுரமிது. இதனால் ஆசார்யோத்தமர்கள் பரமதருமங்களை விளையாட்டாகவே விளம்புவர்கள் என்று காட்டப்பட்டது.

4. ஸ்ரீவில்லிபுத்தூர்க்குப் பெரியாழ்வாருடைய பாசுரமொன்றும் ஆண்டாளுடைய பாசுரமொன்றுமே யுள்ளது. ஆழ்வார் தமது பாசுரத்தில் திருமகளாரான ஆண்டாளுடைய இதிஹாஸத்தை வ்யஞ்ஜிப்பித்தார். (அதன் விவரணம் இங்கு அநபேக்ஷிதமாகையால் விடுக்கப்பட்டது.) ஆண்டாளுடைய பாசுரத்தில் பெரியாழ்வாருடைய வரலாறு சாருதரமாக வ்யஞ்ஜிதம். எங்ஙனே யென்னில்; [மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர்] அன்னமென்பது ஹம்ஸம். ஆசார்ய ஹ்ருதயத்தில் ஸ்வாபதேசப்ரகரணத்தில் (151) "விவேகமுகராய் நூலுரைத்து" என்று தொடங்கும் சூர்ணையில் "நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுனர் போல்வாரை அன்னமென்னும்" என்றருளிச் செய்யப்பட்டது. இதில் மெய்ந்நாவன் என்றது *மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்* என்னப்பட்ட பெரியாழ்வாரையாதலால் ஆண்டாள் மென்னடையன்னமென்று பெரியாழ்வாரையே குறிப்பிட்டாள். ஹம்ஸத்திற்கு நடையழகு; ஆழ்வார்க்கு நடத்தையழகு. [பரந்து விளையாடும்] விஸ்தீர்ணங்களான சாஸ்த்ரங்களிலே பரக்க வியாபரித்து விளையாட்டாகவே அருமறைநூல் நுண்பொருள்களை (பாண்டியராஜ ஸபையில்) வர்ஷித்தவரென்று காட்டினபடி. அப்படிப்பட்டவர் வர்த்திக்கிற வில்லிபுத்தூரென்றதாயிற்று. திருவாய்மொழியில் எம்பெருமானுடைய விளையாட்டைச் சொன்ன *மின்னிடைமடவார் பதிகத்தில் *வேலினேர் தடங்கண்ணினார் விளையாடு சூழல்* என்று கூறியிருப்பதற்கு உள்ளுறை பொருள் 'மஹாஜ்ஞாநாதிகர்கள் விளையாட்டாக சாஸ்த்ரார்த்தங்களைப் பொழிவதற்குத் திரளுமிடம்' என்பதேயன்றோ.

5. ஆசியர்காள்! ஆசார்யனுடைய லீலைகளையோ க்ரீடைகளையோ இங்ஙனே புத்தகம் புத்தகமாக விவரிக்கவேண்டி யிருக்க *பால்யேந திஷ்டாஸேத்* என்கிற பாலத் தன்மையுடையவன் ஆசார்யன்'' என்கிறாரே மதுராந்தக வித்வான். ஸ்வாமிந்! இதற்கு என்னபொருள்? *பால: க்ரீடநகைரிவ* என்றும் *பாலஸ்தாவத் க்ரீடாஸக்த:* என்றும் சொல்லுகிறபடியே சிறு பயல்களைப் போலே விளையாடுகிற

வர் ஆசார்யர்—என்பதுதானே தேவர்க்கு விவக்ஷிதம். நைஷதகாவ்யத்தில் நளனைப் பார்த்து ஹம்ஸபக்ஷி சொல்லுகிறது—*அஹோ! சிசுத்வம் தவ கண்டிதம் ந ஸ்மரஸ்ய ஸக்ய்யா வயஸாப்யநேந* என்று. இங்ஙனே சொல்லும்படி சின்னஞ் சிறு குறும்புகளைச் செய்பவர் ஆசாரியர்—என்பது தவிர வேறொன்றும் தேரு தன்றோ தேவருடைய நிரூபணத்தினால். சாரீரகமீமாம்ஸையில் மூன்றாவதத்யாயம் நான்காவது பாதத்தில் அநாவிஷ்காராதிகரண மென்பதொன்று *தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்* என்கிற ப்ருஹதாரண்யக ச்ருதிக்குப் பொருள்காட்ட வந்தது *அநாவிஷ்குர்வந்நந்வயாத்* என்கிற ஸூத்ரம். வித்யாஸஹகாரியாகச் சொல்லப்பட்ட பால்ய பாண்டித்ய மௌனங்களில் பால்யமென்கிற சொல்லின் பொருளை விவரிக்கத் தோன்றியது. இந்த ஸூத்ரம் (அல்லது) இவ்வதிகரணம். தோன்றினபடி செய்தல், தோன்றினபடி பேசுதல், தோன்றினபடி புஜித்தலாகிற ஸ்வைரசரிதமன்று பால்ய சப்தார்த்தம்; தன்னுடைய பெருமையை வெளிக்காட்டாமை விருப்பதேயாம் - என்று இவ்விடத்து நிஷ்கர்ஷம். ஆசார்யனுடைய க்ரீடையை விவரிக்கும் மதுராந்தக வித்வான் பால்யேந திஷ்டாஸேத்* என்கிற ச்ருதியை யுதாஹரிப்பதற்கு என்ன ப்ரஸக்தி? அந்த ச்ருதியிலுள்ள பால்ய சப்தத்திலிருந்து "பாலஸ் தாவத் க்ரீடாஸக்த:" என்கிற வசனத்தை நினைத்துக்கொண்டாரென்பதில் ஸந்தேஹ முண்டோ? ஆக்ருதத்தில் இவர்க்கு நிருபணீயம் க்ரீடையே யொழிய பால்யமன்றே. இவ்வளவு உலுக்கு வதை ஸஹிக்கமாட்டாதவரென்று விரமாமி. இதற்கு அடியேனுடைய விவரணம் பூர்ணமாக வெளிவருங்காலத்தை ப்ரதீக்ஷித்திருப்பர்கள் ரஸிகவித்வான்கள். **

# 4. ப்ரபத்தி ப்ரபாவபரிசீலனம்.

1. மதுராந்தகம் வித்வானுடைய வியாஸத்திற்கு அடுத்தது "ப்ரபத்தி ப்ரபாவமும் அடியேன் அநுபவமும்" என்பது. பைத்யம்பாடி ராமாநுஜாசாரிய ரென்னுமொருவர் புதிதாக எழுதக்கிளம்பியுள்ளார். இவர் ஒரு கட்டுக்கதை யெழுதுகிறார்; (அதாவது)

"ஸ்ரீ பராசரபட்டர் தமது திருத்தகப்பனாரான ஸ்ரீ கூரத்தாழ்வானிடம் காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தார். அப்போது கூரத்தாழ்வான் பட்டரைப் பார்த்து கடுக உடையவரிடம்போய் பரந்யாஸம் செய்துகொள் என்று ஸாதிக்க ஸ்ரீ பட்டரும் கிளம்ப ஸ்ரீ கூரத்தாழ்வான் அவ்வளவு தூரம் போவதற்குள் இந்த ஜீவனிருப்பது நிலையோ? இங்குவா என்றழைத்துத் தானே அவருக்காக சரணாகதி யநுஷ்டித்தாயிற்றாம். ஆதலால் சரணாகதி செய்து வைக்கும் ஆசார்யன் வெகு முக்கியமானவன்"..................என்பதாக.

2. ஆரியர்காள்! இந்த பண்டிதர் இன்றுதான் முதன்முதலாக எழுதகிளம்பினவரென்று தெரிகிறது. தொடக்கத்திலேயே தம்முடைய அந்யதாஜ்ஞானத்தையோ விப்ரலம்பவைதக்த்யத்தையோ ண்ணும் விண் ணுமெல்லாமறிய வெளி

யிடத் துணிந்து விட்டார். திருவாய்மொழியில் (1-2-10) *எண்பெருக் கந்நலத் தென்கிற பாட்டின் ஈட்டில்—ஆழ்வான் தம்மிடத்தில் திருவாய்மொழிப் பொருள் கேளாநின்ற பட்டரையும் சீராமப்பிள்ளையையும் நோக்கியருளிச் செய்ததும் பிறகு நடந்ததும் அருளிச்செய்யப்பட்டுள்ளது. அந்த வரலாற்றை நாம் ஈட்டிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டாம். உபநிஷத்பாஷ்யகாரரான ரங்கராமாநுஜஸ்வாமி யென்னும் மஹான் தான் பணித்த ஒன்பதினாயிரப்படியில் இந்த வரலாற்றை ஸம்ஸ்க்ருதமாக்கி யெழுதியுள்ளார். க்ரந்த லிபியிலும் ஆந்த்ரலிபியிலும் அச்சிடப் பட்டுள்ளது. அவரெழுதி யிருப்பதாவது—

"அநயா காதயா ஸ்ரீமதஷ்டாக்ஷரார்த்த உக்தோ பவதி. அத ஏவ ஸ்ரீவத்ஸாங்கமிச்ரை: ஏதத்காதாவ்யாக்யாநாவஸரே ஏதத்காதார்த்தஸ்ய ஸ்ரீமதஷ்டாக்ஷரார்த்ததயா அயம் ஸ்வஸ்வாசார்யமுகாத் ச்ரோதவ்ய இதி ச்ரோத்ரூந் ஸ்ரீபட்ட ப்ரப்ருதீந் அநுசிஷ்ய பச்சாத் ஸ்வயமேவ சரீராணாம் அநித்யத்வாத் விலம்போ ந யுக்த:; அதோ மத்த ஏவ ச்ருண்வந்து இதி உக்த்வா சிஷ்யேப்ய: ஸ்ரீமதஷ்டாக்ஷரார்த் தோபதேசபூர்வகம் ஏதத்காதாம் உபதிஷ்டவாந் இதி ஹி ப்ரஸித்தி:."—இவை ரங்கராமாநுஜஸ்வாமி பங்க்திகள்.

3. இப்பங்க்திகளின் பொருளை யறிவதற்கு அதிகமான வ்யுத்பத்தி தேவையில்லை. பைத்யம்பாடி பண்டிதரும் எளிதிலறியக்கூடும். இதை யடியொற்றிப் பரகாலஸ்வாமியின் பதினெண்ணாயிரப்படியிலுள்ளதாவது—"இப்பாட்டில் நாராயண சப்தார்த்தம் உபதிஷ்டமாகையாலே அநுபதிஷ்ட மந்த்ரார்த்தனுக்கு இப் பாட்டினர்த்தம் வெளியிடலாகாதென்று ஸம்ப்ரதாயம்." என்றிவ்வளவே. பரந்யாஸமோ பரணிந்யாஸமோ ப்ரஸ்தாவலேசமும் பெறுதிருக்க இவர்களுக்கு பரந்யாஸக்கனவேயாயிருப்பது ஊமனார்கண்ட கனவிலும் பழுதாயொழியுமத்தனை.

4. பரந்யாஸமோ சரணாகதியோ ப்ரபத்த்யநுஷ்டானமோ இதைப்பற்றிப் பூர்வாசார்ய க்ரந்தங்களில் ப்ரஸங்கலேசமாவது காண்பதுண்டோ? குருபரம்பராஸாரத்திலே எம்பெருமானாரைப் பற்றியருளிச்செய்து போருமிடத்து ஒவ்வோராசாரியருடையவும் திருநாமத்தை யெடுத்து இன்னாரிடத்திலே இன்னது கேட்டாரென்று எழுதிப்போந்த நிகமாந்தமஹாகுரு 'இன்னாரிடத்திலே பரஸமர்ப்பணம் பண்ணினார்' என்றெழுதக் கண்டதுண்டோ? இக்காலத்தில் தனியன் இயற்றுபவர்கள் பஞ்சஸம்ஸ்காரம் பண்ணின ஆசார்யரிற்காட்டிலும் வேறுபட்டவொருநபரை நிர்தேசித்து "குப்பாசார்ய பதாம்புஜாதயுகலந்யஸ்தாத்மரக்ஷாபரம்" என்றும், "திம்மணார்யபதாம்போஜ ந்யஸ்தரக்ஷாபரம் குரும், தம்மணாசார்ய ஸச்சிஷ்யம் தொம்மணார்யமஹம் பஜே:" என்றும் பலபல சுலோகங்கள் பண்ணுகிறார்களே, இப்படியொருசுலோகம் ஒரு முன்னோரைப்பற்றியாவது உண்டோ?

5. தேசிகன் தேசிகனென்றும், நம்தேசிகன் நம்தூப்புல் வள்ளலென்றும், உருப்போடுமவர்கள் ப்ரபத்த்யநுஷ்டானத்தைப்பற்றி வழவழ கொழகொழவில்லாமல் கல்வெட்டுசெய்திருப்பதை எத்தனைதடவை காட்டியாயிற்று. *சோம்பாது இப் பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா!" என்னப்பட்ட எம்பெருமானுக்கும்

சோம்பலில்லை; நமக்கும் சோம்பலில்லை. அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வம் முதலான நமது நாலைந்து நூல்கள் உலகம் பரவியுள்ளன. இப்போது அவற்றின் ஸாரத்தைப் பத்தெட்டு வரிகளில் காட்டுகிறேன் காண்க.

பஞ்ச ஸம்ஸ்காரங்களுள் நான்காவதான மந்த்ரஸம்ஸ்காரத்தில் த்வயமென்கிற மந்த்ரரத்நமே மிகச் சிறந்தது. ஸமாச்ரிதனை சிஷ்யனை அந்த மந்த்ர ரத்நமே க்ருதக்ருத்யனுக்குகின்றதாகவும், இதனாலேயே ஸமாச்ரயண நிஷ்பத்தியென்றும் ஸ்வாமி திருவுள்ளம் பற்றி இதுதன்னை ஸ்ரீரஹஸ்யத்ரய ஸார—க்ருதக்ருத்யாதிகாரத்தில்—

"அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கனமடியாக உண்டான பகவந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித்துப் போந்த நமக்கு அவஸரப்ரதீக்ஷையான பகவத்க்ருபையடியாகவுண்டான ஸதாசார்ய கடாக்ஷவிஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரணு நூச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹஹேதுக்களையெல்லாம் க்ஷமித்துத் தீர்ந்தவடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல ஸர்வசேஷியான ச்ரிய:பதி தன் பேருகத் தானே ரக்ஷிக்குமென்று தேறி நிர்ப்பரனாயிருவென்கை. இது 'மாசுச:' என்கிற சரண்ய வாக்கியத்திலும் தீர்ந்த பொருள்."

என்றுள்ள வாக்கியங்களால் நிஸ்ஸந்தேஹவிபர்யயமாக விசதீகரித்தார். மேலே உதாஹரித்த வாக்கிய ராசியில் "த்வயோச்சாரணநூச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டாநம் பிறந்த பின்பு" என்றும் "சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே" என்றுமுள்ள ஸ்ரீ ஸூக்திகள் ஸாரமானவை. மந்த்ர ஸம்ஸ்கார ஸமயத்தில் த்வயமென்னும் மந்த்ரத்தை ஆசார்யன் சொல்ல அதை சிஷ்யன் பின் சொல்வதுண்டே இதுதான் ப்ரபத்த்யனுஷ்டானமென்று சொ[illegible]தோடு நில்லாமல் இதற்குமேல் வேறொன்று கிடையாதென்றும் ஸ்வயம் [illegible] அருளிச்செய்தார். இங்ஙனே தமிழில் அருளிச் செய்ததை சரணாகதிகத்ய பா[illegible]யத்தின் முடிவில் ஸம்ஸ்க்ருதத்திலுமருளிச் செய்துள்ளார் நிகமாந்த குருதே[illegible]

வித்வன்மணியான இஞ்சிமேட்டழகியசிங்கர் இங்கு வியாக்கியானம் செய்தருளியிருப்பது எங்ஙனேயென்னில்; "அடியாக – மூலமாக. உண்டான – ஜந்யமான. ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு ப்ரபத்த்யநுஷ்டான முண்டான பிறகு." = இதுவேதான் எங்கும் வியாக்கியான பத்ததி.

ஆரியர்காள்! இஞ்சிமேட்டழகியசிங்கரின் மந்த்ரார்த்த வியாக்கியானம் பரவாத இடமில்லை. எடுத்துப் பார்க்கலாம். பகவத்க்ருபையடியாக என்பதன் அர்த்தத்தில் யாருக்காவது ஸந்தேஹமுண்டாகுமோ? அடியாக–மூலமாக என்று ஒருவியாக்கியானம்? "த்வயோச்சாரணநூச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு" என்கிற வாக்யத்தில் ஸந்தேஹநிராஸம்பண்ணித் தெளிவிக்க

வேண்டிய அம்சம் இன்னதென்று தெரியாதா? பிறந்தபின்பு என்பதில் அர்த்த ஸந்தேஹம் யாருக்காவது தோன்றுமா? உண்டானபின்பு என்று அதற்கு விவரணம் காட்டுவதா வ்யாக்யான க்ருத்யம்? உண்டானபின்பு என்று மூலமிருந்தால் பிறந்தபின்பு என்று வியாக்கியானிக்கவேண்டியதுபோலும். வஸ்துத: இஞ்சிமேட்டழகிய சிங்கர் ப்ராமாணிகராகையாலே விஞ்ஞகவரிகளை வளர்த்திக் களேபரம் செய்ய நினையாமல் “க்ஷாந்தி — [illegible] என்றாப்போலே விவரணம் காட்டி நின்றது புகழத்தக்க நேர்மையேயாகும். “த்வயோச்சாரணானுச்சாரணம் பஞ்ச ஸம்ஸ்கார ஸமயத்தில் மந்த்ரோபதேச காலிகமன்று; தபால்போட்டுத் தந்தியடித்துச் செய்யுமது” என்று எதையாவதெழுதிக் காடு பாயுமியல்வினரல்லர் அந்தஸ்வாமி.

பைத்யம்பாடியரோ இவரைக் காக்க எழுபவரோ “ஸ்வாமி தேசிகன் இங்கே இப்படி ஸாதித்திருந்தாலும் வேறிடங்களில் பரஸமர்ப்பணம் தனியே கர்த்தவ்யமென்று எழுதித்தானிருக்கிறார்” என்று வாய்வீச வருவர்கள். அன்னவர்களுக்கு அரிய பெரிய விருந்தொன்று அளிக்கிறோமிதன்கீழ்.

லோகாசார்ய ஸூக்திகளும் நிகமாந்த குருஸூக்திகளும்.

“பிள்ளை லோகாசார்ய திவ்ய ஸூக்திகளில் சில பலவற்றை தேசிகன் அநுவதித்து ஒரு ரஹஸ்யத்தில் மறுப்பெழுதுகிறார்; மற்றொரு ரஹஸ்யத்தில் (முன்பு மறுப்பெழுதினதற்கு அநுதபித்து) அவற்றுக்கு அபிப்ராயவர்ணநம் செய்தருளுகிறார்” என்றும், ‘தேசிகன் தம்முடைய ஒரு ரஹஸ்யத்தில் தாம் மறுத்த அர்த்தத்தையே மற்றொரு ரஹஸ்யத்தில் ஆதரித்து எழுதுகிறார்” என்றும் நாம் பலகால் தெரிவித்து விவரித்திருக்கிறோம். அதனை இங்கு ஸம்க்ஷேபிக்கிறோம். எதற்காக? நிகமாந்தகுருவின் ஸித்தாந்ததத்வத்தை விவேகிகள் நன்குணர்வதற்காக. ப்ரபத்தியை அதிகாரி விசேஷணமாகவும் அநுமதிமாத்ரமாகவும் சித்தஸமாதாநார்த்தமாகவும் சைதந்யக்ருத்யமாகவும் பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்தவற்றை ரஹஸ்யத்ரயஸார சரமச்லோகாதிகாரத்தில் மறுத்திருக்குமிடங்களைக் காணவேணும் [“வ்ராஜ என்று வி[illegible]யமாய்” இத்யாதி.] இனி அடுத்த ஸாரஸாரமென்கிற ரஹஸ்யத்தில் சரமச்லோகாதிகாரத்தில்—“இப்படி விதேயமான [illegible]பநத்தைச் சிலர் அதிகாரிவிசேஷணம் ஸம்பந்தஜ்ஞாநமாத்ரம், ஸித்தோபாய ப்ரதிபத்திமாத்ரம் அநிவாரணமாத்ரம், அநுமதிமாத்ரம், அசித்வ்யாவ்ருத்திமாத்ரம், சைதந்யக்ருத்யம், சித்தஸமாதாநம் என்றாப்போலே சொல்லுமது இவ்விதிக்கும் இத்தை விவரிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் இவற்றுக்குச் சேர்ந்த உபபத்திகளுக்கும் பாஷ்ய [illegible]த்யா[illegible]களுக்கும் நிபுணஸம்ப்ரதாயங்களுக்கும் அநுகுணமாக வேண்டுகையாலே *நானே நானாவித நரகம்புகும்பாவம் செய்தேனென்று நிற்கிற நம்மை ஈச்வரன் ரக்ஷிக்கிறவிடத்தில் *வந்தடைந்தேனென்று நாம் பண்ணுகிற அல்பமான வசீகரணயத்நம் *அதுவுமவனதின்னருளே* *இசைவித்தென்னை* இத்யாதிகளிற்படியே அவன்தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜமாத்ரமன்றோவென்று ஸித்தோபாய ப்ராதாந்யாநுஸந்தானத்தில் அவர்களுக்கு தாத்பர்யம்” என்றெழுதப் பட்டுள்ளதை எடுத்துக் காணவேணும்.

இன்னமும், விரோதபரிஹார ரஹஸ்யத்தில் மூலமந்த்ராதிகாரத்தில்—"பக்தி
போலே ப்ரபத்தியும் ஸாக்ஷாத் சமான உபாயமாய் நின்றது; இது பகவத் ப்ரஸாதவ்ய
வஹிதமாகையாலே ஸாக்ஷாத் ஃபலஹேதுவன்று என்னுமிடமும் வ்யாஜமாத்ர
மென்னுமிடமும் பக்த்யாதிகளுக்கும் துல்யமாயிருந்தது. இப்படியிருக்க, ப்ரபத்
தியை உபாயமன்றென்று விசேஷித்துச் சொல்லுகிறவர்களுக்கு தாத்பர்யமென்
னென்னில்; சாஸ்த்ரங்கள் பக்தியைப்போலே ப்ரபத்தியையும் உபாயமாக விதிக்கச்
செய்தேயும் இவ்வுபாயத்தினுடைய அநுஷ்டாந சரீரத்தைப் பார்த்தால் பரந்யாஸ
ப்ரதாநமாய் நீயே உபாயமாக வேண்டுமென்று அபேக்ஷிக்கிறபடியே பரஸ்வீ
காரம் பண்ணிக்கொண்டு உபாயாந்தரஸ்தானத்திலே நிற்கிற ஈச்வரனுடைய
நிரபேக்ஷோபாயத்வம் இவ்வித்யைக்கு வேத்யாகாரமாய் நிற்கையாலே வித்யாந்
தரங்களிற்காட்டில் இவ்வாசியைப்பற்ற ப்ரபத்தியை விசேஷித்து உபாயமல்
லென்றார்கள்"—என்றுள்ளதைக் காணவேணும். ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸித்தோ
பாய சோதநாதிகாரத்தின் முடிவில்—"ப்ரஸாதநஸ்யோபாயத்வே சாஸ்த்ரீயேபி
ஃபலம் ப்ரதி, கர்த்ருத்வாவ்யவதாநாத்யைஸ் ஸித்தோபாய ப்ரதாநதா; ப்ரபத்தேர்
லக்ஷணே மந்த்ரே விஷ்ணோ வாக்யாந்தரேஷு ச, பாஷ்யாதௌ ஸம்ப்ரதாயே ச
உபாயத்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்," என்று காரிகைகளிட்டு உண்மை விளக்க
பட்டிருப்பதையும் நெஞ்சிற் பதியவைத்துக்கொள்ளவேணும்.

"சரமச்லோகத்தில் 'மாமேகம்' என்ற விடத்தில் ஏகசப்தத்தினால் ஸ்வீ
காரத்தில் [ப்ரபத்தியில்] உபாயத்வம் தவிர்க்கப்படுகிறதென்று முமுக்ஷுப்படியில்
பிள்ளைலோகாசார்யர் ஸாதிக்கிறார். நவீநர்கள் இதை ப்ரபலமாக ஆக்ஷேபிக்கி
றார்கள். ஏகசப்தமானது, தேவதாந்தரங்களைப் பற்றாமல் என்னை மாத்திரம் பற்று
என்று காட்டுமேயொழிய உபாயமாக விதிக்கப்பட்ட ப்ரபத்தியில் உபாயத்வத்தை
எப்படி தவிர்க்கும்? என்று வலிதாக ஆக்ஷேபிக்கிறார்கள். ரஹஸ்யத்ரயஸாரத்
திலும் இவ்வாக்ஷேபமுள்ளது. ரஹஸ்யத்ரயசுளகத்தில் சரமச்லோகாதிகாரத்தில்
ஏகம் என்கிற பதத்திற்கு மூன்று நிர்வாஹங்கள் காட்டுகிறார். "ஏகசப்தம்—
ப்ரபத்தியின் கர்த்தாவான தன்பக்கலிலும், தன் க்ரியையான ப்ரபத்தியிலும் பிறக்
கும் ப்ராதாந்ய புத்தியை பராதீநத்வாதிகளாலே கழிக்கிறது" என்பது மத்யஸ்த
நிர்வாஹமாகக் காட்டப்பட்டது. ஸாரஸாரத்திலும் ஏகசப்தார்த்த விவரணத்தில்
இங்ஙனமே யுள்ளது. விரோதபரிஹாரமென்கிற ரஹஸ்யத்தில் (92) லக்கமுள்ள
விரோதபரிஹாரமாவது—இங்கு வ்ரஜ என்று ப்ரபத்தியை உபாயமாக விதியாநிற்க
'மாமேகம் சரணம்' என்றும் 'தததேகோபாயதாயாச்ஞா' என்றும் 'த்வமேவோபாய
பூதோ மே' என்றும் சொல்லுகை கூடுமோ வென்னில், ப்ரதானமான ஸித்தோ
பாயம் ஸஹஜகாருண்யாதி விசிஷ்டனாய்க்கொண்டு பரஸ்வீகாரம்பண்ணி நிற்கிற
வன் ஒருவனுமேயாகையாலும் அவனுடைய வசீகரணார்த்தமாக விதிக்கப்படுகிற
வ்யாஜமாத்ரமான ஸாத்யோபாயத்தில் ப்ராதாந்யவிவக்ஷை பண்ணுகை உசிதமல்
லாமையாலும் இப்படி வ்யபதேசிக்க விரோதமில்லை"—என்பது. இப்படிப்பட்ட
ஸ்ரீஸூக்திகளினால் பிள்ளைலோகாசாரியருடைய ஸித்தாந்தந்தான் தம்முடைய
ஸித்தாந்தமாக தேசிகனால் நிகமிக்கப் படுகிறதென்று திண்ணமாக எண்ணுக.

ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாத்யோபாய சோதநாதிகாரத்தில் "ஸ்ரீவிஷ்ணு சித்த வாதிஹம்ஸாம்புவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. இதில் விஷ்ணுசித்தரென்றது எங்களாழ்வானை; வாதிஹம்ஸாம்புவாஹரென்றது ஸ்வாசார்யரான கிடாம்பியப்புள்ளாரை. இவர்க்குப் பிறகு வரதாசார்யரென்றது யாரை? என்று விமர்சிக்கவேணும். நடாதூரம்மாளுக்கு வரதாசார்யரென்று திருநாமமுண்டாகையாலே அவர் விவக்ஷிதராயிருக்கலாமென்னில் எங்களாழ்வானுக்கு ஸாக்ஷாச் சிஷ்யரும், வாதிஹம்ஸாம்புவாஹர்க்கு ஆசார்யருமான அவரை நிர்தேசிக்க வேண்டிய ஸ்தானத்தில் நிர்தேசியாமல் அஸ்தானத்தில் நிர்தேசிப்பது அஸமஞ்ஜஸமாகும். தவிரவும், ஸமாஸத்தில் *அல்பாச் தாம் பூர்வம்* என்ற வ்யாகரணாநுசாஸநப்படி விஷ்ணுசித்த வரதாசார்ய வாதிஹம்ஸாம்பு வாஹ' என்றே சொல்லவேணும். 'அப்யர் ஹிதம் பூர்வம்' என்ற அநுசாஸனப் படிக்கும் வரதாசார்யருக்கே பூர்வநிர்தேசம் ப்ராப்தம். அப்படி சொல்லாமல் வாதிஹம்ஸாம்புவாஹர்க்குப் பிறகு வரதாசார்யரென்றது யாரை? என்று விமர்சிக்கவேண்டாமா?. 'இந்த வரதாசார்யர் நடாதூரம்மாளல்லர்' என்பது நிச்சிதம். ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆசார்யரிடத்தில் தேசிகன் ரஹஸ்யார்த்த சிக்ஷைபெற்றது அவருடைய உக்தியினாலேயே அப்ரகம்ப்யமாயிராநின்றது. ரஹஸ்ய மாத்ருகை யென்னும் ரஹஸ்யத்தின் முடிவில் "விசுத்த தேசிகவரா" என்றதையும் அதில் ஆரம்பத்தையும் காண்க.

இந்த வியாஸம் இப்போது ஸசேஷம், நிச்சேஷம் பவிஷ்யதி பரஸ்தாத்.

## கமிட்டியாரைப்பற்றின அநுதாபம்.

ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்திக் கமிட்டியில் அந்வயித்தவர்கள் பெரும்பாலும் வைதிக லௌகிக வித்யா விசாரதர்களென்று கேள்விப்படுகிறேன். தங்கள் வேண்டுகோளுக்கிணங்கி வியாஸங்களை எழுதி யனுப்புமவர்கள் கையும் மனமும் போனபடி யெல்லாம் எழுதியனுப்பி விட்டாலும் தாங்கள் (கமிட்டியார்) ஆராய்ந்து அவத்யங்களை அகற்றி யதாசக்தி சுத்தப்படுத்தி அச்சிட்டிருந்தால் நன்றாயிருக்கும். ஒருவர் "கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே" என்று மகுடமிட்டு எழுதியுள்ள வியாஸத்தில் அபத்தம் தவிர வேறொன்றுமில்லை யாது. கோவிற்சண்டைக்காக நவீனகாலத்தில் (கி.பி. 18வது நூற்றாண்டின் இடையிலோ கடையிலோ கற்பனைசெய்துகொண்ட வஞ்சவாழித்திருநாமத்தை திருக்குமாரர் செய்ததாக எழுதுகிறார். இதில் சர்ச்சையில்லை. அது ஆயிரமாண்டுகட்கு முற்பட்டதென்றே வைத்துக்கொள்வோம். இந்தவாழிப்பாட்டு எட்டடியானதென்றும் இவரெடுத்துக்கொண்டகூறு அதில் நாலாமடியென்றும் எழுதுகிறார். வஞ்சப் பல சமயம்மாற்றவந்தோன்வாழியே. என்று தொடங்கும் வாழிச்செய்யுள் நாலடி கொண்டதேயன்றி எட்டடிகொண்டதன்று. அநுஸந்தானத்திலிருந்துவரும் தமிழ்மாலைகளில் திருப்பாவையொன்று தான் எட்டடிகொண்டது. வேறு எதுவும்

வித்வான்களென்பாருடைய கட்டுரைகளிற் காட்டிலும் வீறுபெற்றதே இது. இப்பெரியார்க்கு நாமளித்து ஜகத்ப்ரஸித்தமாயுள்ள ஸஹ்ருதயரஸிகமணி என்னும் விருதுக்கு ஏற்றிருக்கின்றதென்பதை உகந்துதெரிவிக்கிறேன். ஆழ்வார் எம்பெருமானைக் கதிர்ஞான மூர்த்தியினாய்! என்று விளித்து * உனக்கொன்றுணர்த்துவன் நான்* என்றது போலே இப்பெரியார்க்கும் ஒன்றுணர்த்துகின்றேன் அன்பினால்.

*த்வய்யேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத்வம்* என்கிற பாதத்திற்கு ஸ்வாமிக்கு அபிமதமானபொருள் வெளிவரவில்லை. "உன்னைக்கொண்டு வேறுபயன்களைப் பெறப்பார்ப்பதென்பது அவர்களிடத்தில் காணமுடியாது. *உன்னாலல்லால் யாவராலு மொன்றுங்குறைவேண்டேன்* என்பது உன்னைத் தவிர வேறொருவரிடமும் எதையும் யாசிக்கமாட்டேனென்பதைக் காட்டுகிறது. உன்னிடமும் ஒன்றும் யாசிக்கமாட்டேனென்பது அதனிலும் உயர்ந்த நிலை." என்றெழுதப்பட்டுள்ளது. ஸ்வாமி கருதிய பொருள் இதுவன்று. *உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறைவேண்டேன்* என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தின் சீரிய பொருளை ஆறுயிரப்படிகொண்டு அறியவேணும். யாவராலும் என்று உயர்திணைச் சொல் இருந்தாலும் அஃறிணைப் பொருளே ஆறுயிரத்துள்ளது.

ஸாரமாகக் கேண்மின்; — கர்மஜ்ஞானபக்திகளில் ஆபாதத: தோன்றுகிற உபாயத்வம் தள்ளப்பட்டது. கடைசியாக அந்த உபாயத்வம் ப்ரபத்தியிலுங் கூட இல்லை யென்று முடிக்கப்பட்டு *த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:. சரணாகதி:* ததேகோபாயதாயாச்ஞாப்ரபத்தி:* இத்யாதி ப்ரமாணங்களாலும், *உபாயதாம் ந்யஸ்யேத் தேவே து தாம்* என்கிற கீதார்த்த ஸங்க்ரஹ (ஆளவந்தார்) ஸ்ரீஸூக்தியாலும் அந்த உபாயத்வம் எம்பெருமானிடத்திலே கொண்டுவைக்கப்பட்டது. உபேயஸித்தி ஸமநந்தரம் பரித்யாஜ்யத்வமே உபாயத்வமாகையால் [நதீநிஸ்தரணாநந்தரம் ப்லவபரித்யாகம் போலே] உபாயத்வேந ஹேதுநா எம்பெருமானும் பரித்யாஜ்யனாகக் கூடுமே என்கிற பீதியினால் அப்பெருமான் பக்கலிலுங்கூட உபாயத்வத்தைத் தள்ளுகின்றார்களாம் சிலர். *உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் ந து குணௌ* என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியின்படி உபேயத்வம்போலே உபாயத்வமும் கழற்றவொண்ணாததேயெம்பெருமானுக்கு. அப்படியிருக்க, அவனிடத்திலும் உபாயத்வத்தை விடுவதாகச் சொல்லுகிற இந்த அத்யுக்தியின் தாற்பரியம் தங்களுடைய க்ரியாகலாபங்களில் உபாயதாபுத்தி லவலேசத்தையும் ஸஹியாதவர்கள் என்பதேயாம். இது ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ர ஸாரார்த்த ஸௌரபமிருந்தபடி. இதுவே இங்கு பொருள்.

எம்பெருமானிடத்தில் பரமைகாந்திகள் யாசிப்பதுமுண்டு. *நின்காதலையருளெனக்கு* "மற்றைநங்காமங்கள் மாற்று" பகவந்! பக்திமபி ப்ரயச்ச மே* இத்யாதி பரச்சத வசனஸித்த ப்ரார்த்தனைகள் அபலபிக்க முடியாதவை. இவை ஸ்வரூபாநதிரேகியானவை. ஆக, த்வய்யேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத்வம்* என்கிற ஸ்ரீஸூக்திக்கு ஸ்வாமி திருவுள்ளம் பற்றின பொருள் இங்ஙனேயாகக்கடவது. இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம். ... ... *

**ஸ்ரீமதாண்டவன் ஷஷ்டியப்தபூர்த்தி மலரின் விமர்சமாலிகை முற்றிற்று.**

# அத்யாவச்யக புத்தகவெளியீடு.

(கிடைக்குமிடம்— ஸ்ரீ. உ. வே. T. R. (திருமஞ்சனம்) ஸ்ரீநிவாஸய்யங்கார்,
35, வடக்குசித்திரவீதி ஸ்ரீரங்கம்.

(நாகரலிபி) ஸ்ரீராமாயணஸாராம்ருதம்—விலை 62 பைசா.
( ,, ) ஸ்ரீபாகவத ஸாராம்ருதம் — ,, 88 பைசா.

ஷை இருபுஸ்தகமும் சேர்ந்து 1 ஸெட்டு ரூ 1–25. தபால்செலவு தனி. ஏககாலத்தில் 25 ஸெட்டுவாங்குவோருக்கு ஸெட் 1க்கு ரூ 1-12 வீதமும், 50 ஸெட் ஆர்டருக்கு ஸெட் ரூ 1/- வீதமும் கொடுக்கப்படும் ரயில்வே பார்சல் சார்ஜ், தாபாற் கூலி முதலியன தனி; விலையில் சேரா.

மேற்கண்ட இரு சிறு கையடக்கப் பதிப்புகளும் ஸ்ரீரங்கம் ஸநாதன தர்ம ப்ரசார ஸபா வெளியீடான பக்தாம்ருதம் கலசங்கள் 1 & 4 ஆகும். உருவில் சிறிதேயானாலும் உள்ளடக்க விஷயங்களில் சிறந்தவை. ஒவ்வொரு ஆஸ்திகாபிமானிகளிடமும் அவச்யம் இருக்கவேண்டிய பொக்கிஷம்போன்றன. இம்மை, மறுமைகளில் பயனளிப்பவை.

ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்கள் பலவற்றுள்ளும் ஸ்ரீராமாவதாரமும், ஸ்ரீக்ருஷ்ணாவதாரமும் ஆகிய இவை இரண்டுமட்டுமே பூர்ணாவதாரங்களெனச் சிறப்பித்துக்கொண்டாடப்படுகின்றன. நம்முன்னோரான மஹரிஷிகளும், ஆழ்வாராதியரான பக்திமான்களான பல பெரியோர்களும் இவ்விரண்டு அவதார சரிதங்களிலுமே மிகவும் ஈடுபட்டுப் பலபடியாகவும் புகழ்ந்து போற்றியுள்ளார்கள். இக்காலத்திலும் ப்ரத்யக்ஷத்தில் இவ்விரு அவதாரங்களின் குணாநுபவமே தங்களுக்கு ஜீவனோபாயமாய்க்கொண்ட மஹான்களின் அருமை, பெருமைகளைக் காண்கின்றோம்.

வேதத்துக்கு ஸமமாய், காயத்ரீ மஹாமந்த்ரத்தின் பீஜாக்ஷரங்களை உள்ளடக்கி 24 ஆயிரம் ச்லோகங்களாக ஸ்ரீவால்மீகி பகவானால் இயற்றப்பட்ட இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயண ஆதிகாவ்யமும், இதே போன்று 18 ஆயிரம் ச்லோகக்கணக்கில் ஸ்ரீசுகமஹரிஷியினால் வெளியிடப்பெற்று புராணப்புகழ்வாய்ந்த ஸ்ரீபாகவதமும், பாராயணம் செய்பவருக்கு தர்மார்த்த காமமோக்ஷம் ஆகிய நால் வகையான புருஷார்த்தங்களையும் இம்மையிலும், மறுமையிலும் தவறாமல் அளிப்பனவாய்த் திகழ்கின்றன. இவ்விரண்டு பெரியக்ரந்தங்களையும் முழுமையாகப் பாராயணம் செய்ய சக்தியும, அவகாசமும் இல்லாதவர்களுங்கூட மேல்கூறிய சிறந்த பயன்களை இழவாமல் சுலபமாய்ப் பெறுவதற்கு அனுகூலமாயிருக்கும் வகையில் இந்த இரண்டு சிறுபுஸ்தகங்களும் தொகுக்கப்பெற்றுள்ளன. ஸ்ரீராமாயணத்திலும், ஸ்ரீபாகவத்திலும் உள்ள ஸாரமான விசேஷ ஸர்க்கங்களும் அத்யாயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இவற்றைமட்டுமே தினசரி அல்லது விசேஷகாலங்களில் பக்திச்ரத்தையுடன் பாராயணம் செய்பவர்களுக்கும் ப்ரதிபாத்யனான பகவான் ப்ரீதியடைந்து இம்மை, மறுமைப் பேரின்பங்களை அவச்யம் அநுக்ரஹித்

தருள்வார் என்பதில் ஸந்தேஹமே கிடையாது. பாராயணகாலந்தவிர்ந்த இதர ஸமயங்களிலும் இவற்றைக்கூடவே வைத்துக்கொண்டிருப்பது எவ்வகையான இன்னல்களையும் தவிர்க்கும் ரக்ஷையாகும். மேலும் "இன்கனிதனியருந்தார்" என்ற வசனத்தின்படி ஸ்வப்ரயோஜனத்தோடு மட்டும் ஆறியிருக்காமல் தம்மைச்சேர்ந்தவர்களையும் இத்தகைய நற்பணியில் ஈடுபடச் செய்வது மிகுதியும் நன்மை பயப்பதாகும். கல்யாணம் ஷஷ்டியப்த பூர்த்தி போன்ற சுப, சோபனாதிகால விசேஷங்களில் வசதியுடைய தனிகர்கள் தகுந்தவர்களுக்கு இவற்றை வாங்கி பூரிதக்ஷிணை போன்று விநியோகிக்கலாம். மற்றும் சாந்தி பீடா பரிஹார கர்மாக்களிலும் ஸத்பாத்ரங்களுக்கு அளிக்க உதவும். ச்ராத்தாதி பித்ரு கார்யங்களிலும் தான தர்மம் செய்யலாம். இவ்வாறு செய்வதால் உத்தேசித்துச் செய்யும் கார்யங்கள் பயனடையும். இத்தகைய நற்பலன்களைப் பெறவேண்டிய நோக்கத்துடனேயே சொற்ப விலையில், கையடக்கப் பதிப்பாய் வெளியிடப் பெற்றுள்ளது. அம்ருத கலசம் போன்று பகவத்குணாநுபவமே நிரம்பப்பெற்ற இவ்விரண்டு சிறு புஸ்தகங்களையும் ஆஸ்திகபுத்தியுள்ள அனைவரும் ஆதரித்துப் பெற்றுத் தாங்களும் எல்லாவிதமான தீமைகளையும் ஒழித்து ஸர்வ நன்மைகளையும் பெறுவதோடு ப்ரசுரகர்த்தாக்களுங்களுடைய நோக்கம் நிறைவேறச் செய்து மேன்மேலும் இத்தகைய ஸத்கார்யங்அவர்களில் ஊக்கமும், உத்ஸாஹமும் ஏற்படச் செய்யவேண்டியது அவச்யமான கார்யமாகும். லோகமெல்லாம் ஸுகமாய் இருக்க வேண்டுமெனக்கருதி ஒவ்வொருவரும் இதுபோன்ற நற்பணிகளில் இயன்றவரையில் ஈடுபட வேண்டுமென்பதே எனது ப்ரார்த்தனை. அடுத்தாற்போல் இந்த இரண்டு சிறு புஸ்தகங்களின் விஷய அட்டவணையை முன்னதாகத் தெரிந்து கொள்ளுவதற்குப் பாங்காய் இருக்கும் வகையில் வெளியிட்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

### 1 'ஸ்ரீராமாயண ஸாராம்ருத" புஸ்தக விஷய ஸூசிகை.


1. ஸ்ரீராமாயண பாராயண உபக்ரமம்
2. ஸ்ரீராமாயண மாஹாத்ம்யம்
3. காயத்ரீ ராமாயணம்
4. ஸம்க்ஷேபராமாயணம்
5. ஸ்ரீராமாயண ப்ராதுர்பாவம்
6. ஸ்ரீராமாவதாரம்
7. குமாரஸம்பவம்
8. கங்காவதரணம்
9. ஸீதா விவாஹம்
10. ஆதித்ய ஹ்ருதயம்
11. ஸ்ரீராமஸ்தவம்
12. ஸீதா ஸமாகமம்
13. ஸ்ரீராமபட்டாபிஷேகம்
14. பலச்ருதி
15. ஸ்ரீராமாயண பாராயண ஸமாபநக்ரமம்


### 2 'ஸ்ரீபாகவத ஸாராம்ருத" புஸ்தக விஷய ஸூசிகை.


1. ஸ்ரீபாகவத பாராயண உபக்ரமம்
2. ஸ்ரீமத் பாகவத மாஹாத்ம்யம்
3. ஸ்ரீக்ருஷ்ண சரிதாவதாரிகா
4. ஸ்ரீக்ருஷ்ணாவதாரம்
5. விச்வரூபதர்சநம்
6. ப்ரஹ்மஸ்துதி
7. காளிய மோக்ஷணம்
8. கோவிந்த பட்டாபிஷேகம்
9. கோபிகாகீதம்
10. ராஸக்ரீடா
11. அக்ரூரஸ்துதி
12. குருபுத்ரா நயனம்
13. ருக்மிணீ பரிணயம்
14. நரகாசுரவதம்
15. உஷாபரிணயம்
16. குசேலோபாக்யானம்
17. ச்ருதிகீதா
18. பலச்ருதி
19. ஸ்ரீபாகவதபாராயண ஸமாபநக்ரமம்

## 31-5-67 தேதிவரை ஸ்ரீராமாநுஜன் சந்தாசெலுத்தியவர்கள்

### MADRAS MEMBERS.

| | | |
|---|---|---|
| 89. | வங்கப்பட்டு, கிடாம்பிரங்காசாரியர் | 4 |
| 90. | T. A. Thiruvenkatachariar | 4 |
| 91. | A. Ramaswami Naidu | 5 |
| 92. | S. Amudachar Advocate | 5 |
| 93. | Dr. V. V. Ramanujam P. H D. | 5 |
| 94. | T. Ramaswami Iyengar | 5 |
| 95. | M. N. Rangachari | 14 |
| 96. | M. கண்ணபிரான் முதலியார் | 15 |
| 97. | M. K. ரங்கராமாநுஜம் | 15 |
| 98. | K. S. Krishnaswami | 33 |
| 99. | M. S. Devarajulu Chettyar | 21 |
| 100. | N. Venkatapathi | 6 |
| 101. | G. Ethirajulu Naidu | 17 |
| 102 | G, R. Srinivasan | 17 |
| 103. | T. S. Krishnaswami | 5 |
| 104. | S. R. Srinivasan | 33 |

### வெளியூர்கள்

105. திருநாங்கூர், P. B. ராமாநுஜாசாரியார்
106. P. S. Srinivasachariar Vizag
107. அர்ச்சகம் கிருஷ்ணய்யங்கார், கும்பகோணம்
108 ஜோதிஷமணி அனந்தகிருஷ்ணய்யங்கார், கண்டீரமாணிக்கம்
109. S. அலமேலம்மா, நெய்வேலி
110. நாகப்ப பாகவதர், கரந்தை
111. T.S. ராஜகோபாலாசார் முடிகொண்டான்
112, R. பாஷியம். சேலம் 2.
113. M, P. ஜயகோபாலராமாநுஜதாசர், தர்மபுரி
114. R. பத்மநாபன், சிதம்பரம்
115. S. ராமஸ்வாமி, கோயம்புத்தூர்

### வெளியூர்கள்

116. அம்மங்கி தாமோதராச்சார், திருக்கண்ணங்குடி
117. A. Srinivasayyangar. Calcutta 27
118. R. L. NaraYanan, தென்னூர்
119. C. K. கிருஷ்ணமூர்த்தி, கோவை
120. P. Srinivasan, Bonukonda
121. C. ராமாநுஜம், புளியம்பட்டி
122. K. வெங்கடராமாநுஜம், பெரியகுளம்
123. R. திருமலைஐயங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர்
124. P. N. Krishnaswami Iyengar, New Delhi
125. K. Rangasami Iyengar, Poonamalli
126. T. V. Raghavachar, Jemshedpur
227. ஸந்தானம் செட்டியார், சேலம் (Life Member)
128. T. T. Venkatachalam Pillai, காட்டுமன்னார்கோவில்
129. கோட்டூர் ஸ்ரீநிவாஸாசாரியர், (வேதபாடசாலை)
130. உலகநாதன், புவனகிரி
131. T. N. கிருஷ்ணமாசாரியர், வள்ளியூர்
132 கிடாம்பி பேடராயஸ்வாமி, பெங்களூர்
133. V, Srinivasan, Bombay 22
134. K. M. வரதராஜுலு செட்டி, சேலம்
135. A. Ramanujachari, New Delhi
136. T. K. S. Rangan ,,
137. R Padmanabhan, Tanjore
138 மாறம்பட்டி பராங்குசநம்பி
139. சிவக்கியூர் திருநாவுக்கரசனும், கோவில்பட்டி
140. S. எதிராஜுலு நாயுடு, சீர்காழி
141. ரிக்வேதி. B. வரதாசாரியர், கோவை
144. R. Ramachandran, ,,

---

சந்தா அனுப்பாதவர்களுக்கு பத்திரிகை நிறுத்தப்பட்டது.

—பத்திராதிபர்.